
பெண்மணி
இமயம் தொடங்கி
வங்கம் வரை
கங்கையின்
புனிதப்
பயணம்
தீபாவளி சிறப்பிதழ்
2009
ரூ.18
ஆர்.மணிமாலா
திருமகள் தேடி வந்தாள்
முழு நாவல்

# திருமகள் தேடி வந்தாள்!

- ஆர்.மணிமாலா

நள்ளிரவில் கூட குயில் கூவுமா என்ன? கொல்லைப்புற மாமரத்திலிருந்து குயிலின் சப்தம் கேட்டது. அதன் குரலில் பதுங்கியிருந்தது சந்தோஷமா, துயரமா என்பதை இனம் காண முடியவில்லை.

உறக்கம் வராமல் அறைக்குள் நடமாடிய திலக்கிற்கு... அது தன்னைப் போலவே தத்தளித்துக் கொண்டிருப்பது போலவே தோன்றியது.

உறவைத் தொலைத்து விட்டு தேடிக் கொண்டிருக்கிறதோ?

ஜன்னல் திரைச் சீலையை ஒதுக்கி விட்டு கதவுகளைத் திறந்தான்.

நவநாகரீகப் பெண்ணாய்... சில்லிட்ட காற்று வெட்கமின்றி ஓடி வந்து அவனைத் தழுவிக் கொண்டது.

அவன் நெற்றியில் பூத்திருந்த குண்டூசி முனை வியர்வைத் துளிகள் கணத்தில் காணாமல் போயின.

பெயருக்குதான் பெங்களூரு இளைமேட்டை தலையில் தூக்கி வைத்து ஆடுகின்றனர். மே மாத வெயிலுக்கு வேலூர், சென்னை, பெங்களூரு எல்லாம் ஒரே மாதிரி வெக்கைதான்.


திலக்கிற்கு மொட்டை மாடியில் மல்லாந்து படுத்துக் கொண்டு நிலவில் தெரியும் மேடு பள்ளங்களை ஆராய்ந்தபடி உறங்குவது ரொம்பப் பிடிக்கும்.

எங்கே... அம்மா விட்டால் தானே?

டி.வி.யில் கண்ட மேனிக்கு நடந்தது, நடக்காதது எனப் பார்த்து விட்டு மோகினிப் பிசாசு வந்து அடிக்கும் என்று பெரிய 'தடா'வே போட்டு விட்டாள் அம்மா ராஜலட்சுமி.

பவுர்ணமிக்கு இன்னும் மூன்று நாட்கள் இருந்ததால்... வொய்ட் வாஷ் பண்ண ஆயத்தமாகி கொண்டிருந்தது நிலா.





நட்சத்திரங்களை தொட்டு விடும் பேராசையில் சில வெள்ளைப் பறவைகள்... ஒரே சீராகப் பறந்துக் கொண்டிருந்தன.

வெளவால்களின் கைங்கர்யமோ என்னவோ, மரத்திலிருந்த மாங்காய்கள் தொப், தொப்பென கீழே விழுந்துக் கொண்டிருந்தது.

கீழே என்னவோ சப்தம். சாமான்களை உருட்டிக் கொண்டும், பேசிக் கொண்டும்...

அம்மாவும், அண்ணியும் இன்னுமா தூங்கவில்லை? நேரமாகி விட்டதல்லவா?

சுவர் கடிகாரத்தைப் பார்த்தான்.

இரவு 11.45 என்றது.

இன்னும் 15 நிமிடம் தான்!

அவனுக்கு முப்பது வயது முடிந்து முப்பத் தொன்று பிறந்து விடும்.

அவன் வாழ்நாளில் மறக்க முடியாதது அந்த பிறந்த நாள்.



எங்கேயோ ஒரு மூலையில்... அவள்! அவளும்... இப்போது என்னைப் பற்றி, சற்று நேரத்தில் பிறக்க உள்ள என் பிறந்த நாள் பற்றி நினைப்பாளா? மனதார வாழ்த்துவாளா?

திலக்கினுள் உள்ளமெங்கும் அவள் நினைவுகள் இறுக்கமாய் அணைத்தது.

பீரோவைத் திறந்தான்.

யாரும் எளிதில் கண்டுபிடித்து விட முடியாதபடி சலவைத் துணிகளின் மடிப்புக்கு இடையில் பதுக்கி வைத்திருந்த கவரை எடுத்தான்.

ஓர்... அழகிய ஓவியப் பெண்!

துருதுருவென விழிகள். வளைவான புருவம். அடர்ந்த இமைகள். நேராய் இறங்கி, இருபக்கமும் வளைந்து பருத்த அழகான குண்டு மூக்கு. கடுகளவு ஒற்றைக் கல் மூக்குத்தி. குவிந்து பிளந்த அழகான அதரங்கள். சிறு புன்னகையில் மெல்ல பளீரிட்ட வரிசை பற்கள். கொஞ்சத் தூண்டும் மோவாய் நடுவில் சின்ன பிளவு என... ஆசைத் தூண்டும் அழகு முகம்.

புகைப்படத்தைப் பார்த்து அச்சு பிசகாமல் வரைந்தது திலக் தான்!

நல்ல ஓவியத் திறமையிருந்தும் மற்ற துறை ஈடுபாட்டின் காரணமாக பட்டை தீட்டிக் கொள்ளாமலே இருந்து விட்டான்.

'எங்கேயிருக்கே... எப்படியிருக்கே? ஏழு வருஷமாச்சுடி உன்னைப் பார்த்து! என் வாழ்க்கையைத் தொலைச்சிட்டு ஏழு வருஷமா தேடிக்கிட்டே இருக்கேன். எப்ப உன்னைப் பார்ப்பேன்?'

நெஞ்சோடு அந்த ஓவியத்தை வைத்து அணைத்து ஆசுவாசப்படுத்திக் கொள்ள முனைந்தான்.

முடியவில்லை.

ரெயிலடி தண்டவாளமாய் இதயம் தடதடத்தது. இரைச்சலான வேதனைகளை மீறி... ஏழு வருடத்திற்கு முன்பு, இதே நாள், இதே நள்ளிரவு நேரம் மனதை வருடிய நினைவுகள் மூடிய கண்களுக்குள் நிழலாடின.

திலக் ஹாஸ்டலில் தங்கி எம்.எஸ்சி. படித்துக் கொண்டிருந்தான். அவனுடன் தங்கியிருந்த மற்ற இருவர், குமரன், பசவராஜ்... அவன் படித்த கல்லூரியில் வெவ்வேறு வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாலும்... இவனின் நெருங்கிய நண்பர்கள்தான். அந்தரங்க மனதை அறிந்தவர்கள்.

அன்று அவளோடு பேசி மகிழ்ந்த தருணங்களை அசைபோட்டபடி உறங்க எத்தனித்த தருணம்... அறைக்கதவு ரகசியமாக தட்டப் பட்டது.

"யார்டாது?" என்றான் பசவப்பா.

"வார்டனாயிருக்குமோ?" என்றான் சந்தேகமுடன் குமரன்.

மறுபடியும் கதவு தட்டப்பட...

திலக் விழித்துக் கொண்டான் முழுமையாக.

எழுந்து வந்து கதவை திறந்தவனுக்கு முதலில் புலப்படவில்லை... உற்று கவனித்த பின்தான் உறைத்தது.

அவளும்... அவளின் இரு தோழிகள் ரோஸ்லினும், விமலாவும்... ஆண்கள் உடையில்.

"ஏய்... பப்ளி... நீயா.. இங்கேயா?" என்றான் வியப்புடன் திலக்.

"திலக்கோட ஆள்டா..."

"இங்கே... இந்த நேரத்திலயா... எப்படிடா முடியும்?"

திலக்கால் பப்ளிமாஸ் என்றழைக்கப்படும் அவள்... மெழுகுவர்த்தி ஏற்றிய கேக்கை பின்னால் மறைத்து வைத்திருந்ததை அவன் முன் நீட்டி. "ஹேப்பி பர்த்டே டு யூ டியர்" என்றாள் காதலாய்.

அடுத்த நிமிடம் ஆர்ப்பாட்டமின்றி மூடிய கதவிற்குள் அவன் பிறந்த நாளை கொண்டாடிய விதம்... காலச்சுவடுகளால் காணாமல் போய்விடக் கூடியதல்ல.

மெனக்கெட்டு, தன் காதலன் பிறந்தநாளைக் கொண்டாட, தன் ஹாஸ்டல் வார்டன், வாட்ச்மேன் எல்லாரையும் ஏமாற்றி விட்டு ஆண்கள் உடையில் தந்திரமாக திலக் இருக்கும் ஹாஸ்டலில் புகுந்து...

'இவ்வளவையும் தைரியமாக பண்ணிய நீ... எப்படி என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் சென்றாய்? என்னால் உன்னை எள்ளளவும் மறக்க முடியவில்லை பப்ளி! நீ என்னை ஏமாற்றி விட்டாயா? அல்லது நான் உன்னை ஏமாற்றி விட்டேனா? புரியவில்லையடி!'

"கல்யாணமாய்ட்டா... எல்லா பெண்களும் சுமங்கலியா சாகணும்னுதான் ஆசைப்படுவாங்க. ஆனா, எனக்கு முன்னே நீ சாகணும் திலக்!"

"அடிப்பாவி... ஒரு தமிழ்ப்பெண் பேசற பேச்சா இது?"

"ம்ஹூம்... ஒரு தமிழ் தாயா பேசறேன் திலக். ஆண்கள் பொதுவில் பெண்களை விட மனசளவில் தைரியம் குறைச்சல். ஆரம்பத்திலேர்ந்தே அம்மா, அக்கா, தங்கை, மனைவின்னு அவங்களுக்கு தேவைப்பட



சின்ன விஷயங்களுக்கு கூட லேடீஸை எதிர்பார்த்துதான் பழக்கம். குளிக்க, துவைக்க, சாப்பிட, படுக்கன்னு எல்லாமே உட்கார்ந்த இடத்திலேர்ந்து நடக்கணும். திடீர்னு மனைவி செத்துப் போய்ட்டா... வயசான காலத்திலே இந்த ஆம்பளைங்க படறபாடு இருக்கே... சகிக்காது சாமி. என் திலக் அப்படி அல்லாடக் கூடாது. அதுவும் நான் பிணமா கிடந்து நீ அழறதைப் பார்த்து கண்டிப்பா என் ஆத்மா கூட ஜீரணிக்காது. நீ கஷ்டப்படக் கூடாதுடா. நீ எனக்கு குழந்தைடா... உன்னை உள்ளங்கையிலே வச்சு தாங்குவேன்டா!"

கொஞ்சலாய்... கெஞ்சலாய்... காதலாய் அவனுள் பாகாய் உருகி கலந்தவளின் குரல் இன்னமும் செவிக்குள் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

'இப்ப... இந்த குழந்தை நீயில்லாம தவிச்சுப் போயிருக்கேன் பப்ளி.. உணர்கிறாயா, இல்லையா?'

'தட்... தட்...'

கதவு தட்டப் பட்டது.

'இந்த நேரத்தில் யார்... அம்மாவா?' சட்டென அந்த ஓவியத்தை பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டு, முகத்தை துடைத்துக் கொண்டு கதவை திறந்தவன் அதிர்ந்துப் போனான்.

ஒற்றை மெழுகுவர்த்தி ஏற்றிய கேக்குடன் மதுரிமா நின்றிருந்தாள்.

## 2

"ஹேய்... யூ!"

"ஹேப்பி பர்த்டே டூ யூ... ஹேப்பி பர்த்டே டூ திலக்... ஹேப்பி பர்த்டே டூ மை டியர்..." ராகமாய் பாடிக் கொண்டே உள்ளே நுழைந்தாள் மதுரிமா.

"மது... நீ எப்ப வந்தே?"

"முதல்ல வத்தியை ஊதி அணைச்சிட்டு கேக்கை வெட்டு. மீதியை அப்புறம் பேசிக்கலாம்... ம்... ஹேப்பி பர்த்டே டூ யூ..." தன் காரியத்தில் கண்ணும் கருத்துமாய் இருந்த மது... அங்கிருந்த டேபிள் மீது கேக்கை வைத்தாள்.

மெழுகுவர்த்தி காற்றில் வேகமாய் அலைபாய... சட்டென மின்விசிறியை அணைத்தாள்.

வியப்பும் சலிப்புமாய் அவளைப் பார்த்தவன், சங்கடத்துடன் மெழுகுவர்த்தியை ஊதி அணைத்தான்.

"ம்... கேக் வெட்டுங்க!"

"எதுக்கு மது இதெல்லாம்? நான் என்ன சின்னக் குழந்தையா?"

"சந்தோஷமா பிறந்தநாளைக் கொண்டாட சின்னக் குழந்தையாதான் இருக்கணும்னு கட்டாயமில்லை" என்றவள் அவன் வெட்டிய கேக் துண்டை எடுத்து அவன் வாயில் வைத்தாள்.

"தாங்க்ஸ்..."

"நானும் தாங்க்ஸ் சொல்ல வேண்டாமா? அதை எடுத்து எனக்கு ஊட்டுப்பா!"

ஊட்டினான்.

"வாவ்... தாங்க்ஸ்டா மச்சான்!" என்றாள் குஷியாக மது.

அவள் கண்கள் திலக்கை அணுஅணுவாய் மேய்ந்தன. ஓங்கி பனியனில் நின்றிருந்த அவனைப் பார்த்து வாய்விட்டு சிரித்தாள்.

"இந்த பர்த்டேயை நீ ஆயுசுக்கும் மறக்கக் கூடாது திலக். ஓங்கி பனியனோட கேஷுவல் டிரஸ்ல... நைட்டு பன்னிரெண்டு மணிக்கு, மதுவோட கொண்டாடிய பிறந்தநாளை எப்படி மறக்க முடியும்... ம்?"

"அதெல்லாம் இருக்கட்டும்... டெல்லியிலேர்ந்து எப்ப வந்த நீ? நான் ஆபீஸ் முடிஞ்சு வந்தப்ப கூட நீ இல்லையே?"

"பத்து மணிக்கு வந்தேன்!"

"நைட்டு பத்து மணிக்கா? அப்படியென்ன அவசரம்?"

"இப்படியொரு பிறந்தநாளை கொண்டாடறதுக்குதான்!"

"பைத்தியமா உனக்கு?"

"ஆமாம்... உன் மேல..."

"உன்னை பேசவிட்டா பேசிக்கிட்டே இருப்பே... எனக்குத் தூக்கம் வருது... போ வெளியே!"

அந்தப் பேச்சு... அவள் முகத்தை வலியில் சுருங்க வைத்தது. ஆனாலும் சட்டென தன்னை மாற்றிக் கொண்டாள்.

"அஞ்சாறு வருஷமா உனக்காகவே காத்திருக்கிறேன். உன் பின்னாடியே நாய் மாதிரி சுத்திக்கிட்டிருக்கேன். ஆனா, உன் பேச்சு மட்டும் மாறவே இல்லை!"

"புரியுது இல்லே... ஏன் மறுபடி மறுபடி தொந்தரவுப் பண்ணிக்கிட்டே இருக்கே?"

"என்னப் பண்றது? உன் விஷயத்திலே நான் சூடு சொரணையே பார்க்கறதில்லே. ஏன்னா... உன்னை என்னைக்கு பார்த்தேனோ... அன்னைக்கே கடவுள் சொல்லிட்டார்.

இவன்தான் உனக்கு... விரட்டி பிடிச்சுக் கோன்னு. நீ என் ஆளுங்கறப்ப... நீ சொல்றதை எல்லாம் பெரிசா எடுத்துக்கிட்டா... நஷ்டம் எனக்குதான்."

"அறுக்காதே... கிழே போ!"

"ஆச்சர்யமாயிருக்கு திலக்! என்னைப் பார்த்து நானே பொறாமைப்பட்ற அளவுக்கு அழகு, படிப்பு, திறமை, வேலை, சம்பளம்னு இருக்கப்ப... எப்படி உன்னை அட்ராக்ட் பண்ணாம போனேன்?"

"மை காட்!" திலக் அலுத்துக் கொண்டான்.

"ஓக்கே... ஓக்கே! பர்த்டே பேபியை டென்ஷனாக்க விரும்பலே. நான் போயிடறேன். அதுக்கு முன்னாடி வாழ்த்திடறேனே..." என்றவள் அவன் கையைப் பற்றி, "சீக்கிரம் உன் மனசுல மது வரணும். அடுத்த வருஷம் உன் வொய்ப் மதுவோட பர்த்டே கொண்டாடணும். அவளோட குழந்தைக்கு அப்பாவாகி சந்தோஷப்படணும்."

"ச்சை.. விடு!" கையை உதறி விடுவித்துக் கொண்டான்.

மதுரிமா வாய் விட்டு சிரித்தாள்.

"நீ என்ன சொன்னாலும் சரி... மது உன் பின்னாடி சுத்திக்கிட்டே இருப்பா. முயற்சி திருவினையாக்கும். ஓக்கே!" கண்ணடித்து சொன்னவள் வெளியேற... கலவரம் ஓய்ந்தது போல் அமைதியானது... அறையல்ல... திலக்கின் இதயம்.

கதவை சார்த்தி தாழிட்டவன் தொப்பென கட்டிலில் விழுந்தான்.

மதுவின் செய்கை அவனிடம் சிறு சலனத்தைக் கூட உற்பத்தி செய்யவில்லை... சங்கடத்தைத் தவிர.

மதுரிமா - அண்ணி சுப்ரியாவின் தங்கை.

ஐந்து வருடத்திற்கு முன்பு அண்ணன் கோபிக்கும், சுப்ரியாவிற்கும் திருமணமான போது... அன்றுதான் முதன்முதலாக திலக்கைப் பார்த்தாள் மது.

அப்போதுதான் சுடச்சுட படிப்பை முடித்து விட்டு கோயம்புத்தூரிலிருந்து டெல்லிக்கு ரீஸைம் டிபார்ட்மெண்டில் பணிக்கு சேர்ந்திருந்தாள்.

இருபத்தி மூன்று வயது இளம்பெண் தனியே டெல்லிக்கு சென்று வேலை பார்ப்பதில் பெற்றவர்களுக்கு உடன்பாடில்லை. ஆனால், தான் நினைத்ததை சாதிக்க... போராடி, வெற்றி பெற்று சென்று விட்டாள்.

பெண் பார்க்கும் படலம், நிச்சயதார்த்தம் எதிலும் கலந்துக் கொள்ள முடியாதவள்...

## திடீர் காய்ச்சலுக்கு சிறந்த நிவாரணி!

திடீர் காய்ச்சலா? இஞ்சி. மிளகையும் சேர்த்து நசுக்கி நீரில் கொதிக்க காய்ச்சி வடிகட்டி. சோயா பாலுடன் சிறிது சர்க்கரையும் சேர்த்து சாப்பிட்டால் காய்ச்சல் தணியும். சாதாரணமாக ஏற்படும் தலைவலிக்கு சுக்கு கைகண்ட மருந்தாகும். கொஞ்சம் சுக்கை எடுத்து நீரிட்டு மை போல் அரைத்து நெற்றியில் பற்று போட்டால் தலைவலி நீங்கும்.

வாந்தி பேதி. மந்தபேதியா? ஒரு சட்டியில் இரண்டு மிளகாயைச் சேர்த்து கருகும் வரை வறுக்க வேண்டும். அத்துடன் இரண்டு மூன்று டம்ளர் தண்ணீர் விட்டு பாதியாக சுண்டுமளவுக்கு காய்ச்சி. அந்நீரை ஒரு வேளை உள்ளுக்கு சாப்பிட்டால் போதும். வாந்தி நின்று விடும். ரத்தக் கொதிப்புக்கு வெள்ளைப்பூண்டு. இருமலுக்கு வசம்பு. செரிமானத்துக்கு பேரீச்சம்பழம். கண்ணுக்கு பொன்னாங்கண்ணிக் கீரை. பற்களுக்கு கரிசலாங்கண்ணிக் கீரை. வயிற்று உபாதைகளுக்கு வாழைப்பழம் நல்லது.

**- திருமகள்.**

திருமணத்திற்கென இரண்டு நாள் லீவில் வந்தவள் திலக்கை பார்த்து மயங்கி விட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

கச்சிதமான ஆணழகன். எல்லாவற்றிற்கும் மேலாக... எந்தப் பெண்ணையும் ஏறிட்டும் பார்க்கவில்லை. அப்படியே பார்க்க நேர்ந்தாலும் சிறு சலனமும் தென்படவில்லை அவன் கண்களில்.

மற்ற பெண்களை விடுங்கள். புது அண்ணியின், புத்தம் புது மலராக வளைய வந்த அழகுப் பதுமை தங்கை மதுரிமாவை சிந்தித்தும் சட்டை செய்யவில்லை என்றால் எப்படியிருக்கும்? சிறு கோபம் எட்டிப் பார்க்க மதுவின் கண்கள் அவனையேத் தொடர்ந்தன... கிட்டத்தட்ட ஐந்தாண்டு காலமாய்.

மதுவின் குணநலன், பேச்சு யாரையுமே கவர்ந்து விடும். திலக்கின் அம்மாவுக்கும் பிடித்துப் போனது. அவள் மனசும் புரிந்துப்





போனது. லீவு கிடைக்கும் போதெல்லாம்... திலக்கை பார்க்க ஓடோடி வந்து விடுவாள். அனைவர் சம்மதத்துடன் திலக்கை காதலித்தாலும்... சம்மதிக்க வேண்டியவன் இன்னும் பச்சைக் கொடி காட்டவில்லை.

'மதுவின் ஆசைக்கு நீயும் கொம்பு சீவி விடாதேம்மா' என்று அம்மாவிடம் சொல்லி எல்லாவற்றிற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.'

பலவும் சிந்தித்தபடி விடியற்காலையில் உறங்கிப் போனான் திலக்.

**பி**ரஷ் பண்ணி விட்டு ஹாலுக்கு வந்தவன் கையில் தினசரியை எடுத்துக் கொண்டு அமர்ந்தான்.

"அம்மா... டீ" குரல் கொடுத்தான்.

"ஹேய் திலக்... குட்மார்னிங்!" என்றாள் மது.

"ம்... குட்மார்னிங்" என்றான் நிமிராமலேயே.

"ஹெவ்... எ... டீ" கோப்பையை நீட்டினாள்.

"தாங்க்ஸ்... அம்மாவைத்தானே கேட்டேன்!"

"இருக்கட்டுமே.. அத்தைக் கிட்டேர்ந்து நான்தான் வாங்கிட்டு வந்தேன்."

"......?!"

"வர... வர... பெங்களூரும் ஹாட்டாயிட்டு வருது... க்ளைமேட் சரியில்லே... இல்லே!"

"......?!"

"இன்னைக்கு என்ன புரோக்ராம்? நான் நைட்டு டிரெய்னை பிடிக்கணும். மேட்னி ஷோ போயிட்டு வரலாமா?"

"ஸாரி மது... எனக்கு எந்த புரோக்ராமும் இல்லே... ஆபீஸ்ல ரொம்ப முக்கியமான வேலை இருக்கு."

"ஓக்கே... டிஸ்டர்ப் பண்ணலே. பட், ஒரே ஒரு ரிக்வெஸ்ட்!"

".....?!" தலை உயர்த்திப் பார்த்தான்.

"நான் உனக்காக டிரஸ் எடுத்து வச்சிருக்கேன். அதை போட்டுக்கணும். இன்னைக்கு லஞ்ச் முழுக்க நான்தான் சமைக்கப் போறேன். லஞ்சுக்கு வீட்டுக்கு வந்துடுங்க... ப்ளீஸ்!"

## 3

**ம**து ஏப்ரானை கட்டிக் கொண்டு கிச்சனையே ஒரு கலக்கு கலக்கிக் கொண்டிருந்தாள்.

சமையலில் வட இந்தியாவும், தென் இந்தியாவும் கமகமத்தது.

பிரியாணி, கோழிகுருமா, மட்டன் சுக்கா, கோப்தா, பாலக் பனீர், ஆலு பரோட்டா என்று விதவிதமாய் சமைத்தாள்.

திலக்கின் அம்மா ராஜலட்சுமி மதுவை ஆச்சரியமாய் பார்த்தாள்.

"என்னடி இது ஆச்சர்யம்? படிச்சு முடிக்கற வரைக்கும் சுடுதண்ணிக் கூட வைக்கத் [illegible] கவலைப்படுவா. ஆனா, பெரிய பெரிய ஓட்டல்ல சமைக்கிற மாதிரி பக்குவமா, வகை வகையா, வாசனையா... எப்படி சமைக்க கத்துக்கிட்டே?"

''எல்லாம் உங்க பிள்ளைக்காக கத்துக்கிட்டதுதான் அத்தை!''

''நல்லாருக்கே!''

''அய்யோ... நிஜமாதான் அத்தை. சுப்ரியா மேல சத்தியமா...''

''அவளை ஏன்டி இழுக்கறே?''

''நம்ப மாட்டேங்கறீங்களே! எப்படியிருந்தாலும், திலக் குடுமி என் கையிலதான்னு ஆகிப்போச்சு. அவரோட படிப்புக்கேத்த வேலை டெல்லியிலே... இப்ப வாங்கற சம்பளத்தை விட மூணு மடங்கு தர்றதுக்கு தயாராயிருக்காங்க. அதனாலதான்... அங்கேதான் குடும்பம் நடத்தணுமேங்கற நிலைமையில... நார்த் இண்டியன், சௌத் இண்டியன் ரெண்டு வகையும் சமைக்க கத்துக்கிட்டேன்.''

ராஜலட்சுமி அப்பெண்ணின் ஆசை மனசு புரிய... தலையை தடவிக் கொடுத்தாள்.

''உன் மனசுப்படி எல்லாமே அமோகமா நடக்கணும். ஹூம்...'' சமையலறையை விட்டு வெளியேறினாள்.

அதுவரை பாத்திரம் கழுவிக் கொண்டிருந்த சுப்ரியா கையை துடைத்துக் கொண்டு தங்கையின் அருகில் வந்தாள்.

''மது''

''என்னக்கா.. இந்த பாசந்திய டேஸ்ட் பண்ணிப் பாரேன்... ஸ்வீட் கரெக்டா இருக்கான்னு!''

''எல்லாம் சரியாதான் இருக்கும்... ஆனா நீ பண்றது எதுவும் சரியாப் படலே எனக்கு!''

''என்ன குழப்பறே சுப்ரியா.''

''நேத்து நைட்டு திடீர்னு வந்து நிக்கறே. பன்னெண்டு மணிக்கு கேக் வெட்டறே... இப்ப... மாங்கு மாங்குன்னு சமைக்கிறே! ஆனா, ஒரு சின்ன அளவுலக் கூட திலக்கிட்டேர்ந்து ரெஸ்பான்ஸ் வந்ததா?''

''வரும்க்கா... நைட்டு கேக் வெட்டினாரே!''

''காலையிலே நீ குடுத்த டிரஸ்ஸை போட்டுக்கலியே...''

மதுரிமா... தன்னுள் சுழன்றடித்த ஏமாற்றங்களை மறைத்தவளாய்... அக்காவின் இரு கைகளையும் பற்றி ஆட்டியவளாய் சிரித்தாள்.

''இதெல்லாம் சின்ன விஷயம்க்கா! லஞ்சுக்கு வந்து இதையெல்லாம் சாப்பிட்டு மலைச்சுப் போய் நிக்கலேன்னா என்னைக் கேளு!''

''நீயென்ன சின்னக் குழந்தையா? நான் என்ன சொல்ல வர்றேங்கிறதையே புரிஞ்சுக்க மாட்டியா? உனக்கென்னடி குறைச்சல்? நீதான் வெக்கத்தை விட்டு அவன் பின்னாடி சுத்தி சுத்தி வர்றே. ஆனா, அவன் உன்னை...''

''எல்லாம் மாறும்... நடக்கும்!'' ஏப்ரானைக் கழற்றியபடி உறுதியாக சொன்னாள்.

''இல்லே மது... திலக் மனசுல வேற பொண்ணு இருக்கா.''

'' இருந்திருக்கலாம்... இப்ப இல்லே!''

''உனக்கெப்படி தெரியும்''

''நீ சொன்னதுக்கு பதிலை சொன்னேன். பட், திலக்கிற்கு கல்யாணம்னு ஒண்ணு நடக்குமில்லையா? இந்த வீட்டு மருமகளா நான்தான்க்கா வருவேன். அதிலே எந்த மாற்றமும் இல்லே!''

''படிச்ச முட்டாள்டி நீ!'' என்றாள் சுப்ரியா கோபமாக.

''திலக் விஷயத்திலே மட்டும்! ஒக்கே... அவர் இன்னும் ஒன்அவர்ல வந்துடுவார். நான் மறுபடி ஒரு குளியல் போட்டுட்டு ரெடியாய்டறேன். அப்புறம் ஒரு ரிக்வெஸ்ட். தயவு பண்ணி டைனிங் டேபிள்கிட்டே நீங்க யாரும் வந்து நிக்காதீங்க. அவருக்கு நான் மட்டும்தான் பரிமாறணும்... ஒக்கே?''

''ச்சீ... என்னமோ போடி!'' வெறுப்பாய் சொல்லிவிட்டு வெளியேறினாள் சுப்ரியா.

''உன் கோபமெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். உன் மாமியார்கிட்டேயும் சொல்லி வை. ரெண்டு பேரும் டைனிங் டேபிள் பக்கம் வரவே கூடாது...''

**பி**ற்பகல் மூன்று மணி!

இளரோஸ் நிற சல்வாரில் நகத்தின் நுனியை கடித்தபடி இருபதாவது முறையாக வாசலுக்கு வந்து தெருவை எட்டிப் பார்த்தாள் மது.

சாப்பிட்ட மயக்கத்தில் சின்னதாய் தெருவில் உள்ளோர் தூக்கம் போட்டிருக்க... தெரு வெறிச்சோடி போயிருந்தது. பாய்களை சைக்கிளில் கட்டி, ''பாய்... பாய்...'' என்று கூவியபடி ஓட்டிக் கொண்டு வந்த ஐம்பது வயது நபரைத் தவிர... யாருமேயில்லை.

''போன் பண்ணிப் பாரேன் மது!'' அவள் பின்னே வந்து எட்டிப் பார்த்தாள் ராஜலட்சுமி.

''இல்லே அத்தை... வந்துடுவார்!''

''மணி மூணாயிடுச்சே... பண்ணிதான் பாரேன்!''

''பண்ணினேன்'' என்றாள் சன்னமாக.

''என்ன சொன்னான்?''

''ஸ்விட்ச் ஆப் பண்ணி வச்சிருக்கார்.''

''சே... என்ன பிள்ளை அவன்? நீ வாம்மா... சாப்பிட்டுக்குவே!''



''இல்லே அத்தை... அவர் வந்துடட்டும்!''

''அவன் வர்றப்ப வரட்டும்... நீ சாப்பிடு!''

''நான் ஆசையா சமைச்சதே அவருக்காகதான்... வருவார்... ஆபீஸ்னா ஆயிரம் வேலைகள் இருக்கும். வந்துடுவார்...'' என்றவளின் குரல் அமுங்கி வந்தது.

**க**ம்ப்யூட்டர் திரையை அணைத்து ஆயாசமாய் உடம்பை முறுக்கினான்... திலக்.

இவன் கேபினை நோக்கி வந்துக் கொண்டிருந்தான் ரஞ்சித்.

இதே பில்டிங்கில் 12-வது மாடியில் பணிபுரியும் என்ஜினீயர். இவனின் நண்பன்.

''ஹாய் ரஞ்சித்... என்ன இங்கே? லீவா?''

''கேக்க மாட்டே? முதல்ல கைய குடுடா ராஸ்கல்... மெனி... மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆப் த டே!''

''தாங்க்யூ... பரவால்லேயே... என் பர்த்டேயை ஞாபகம் வச்சிருக்கே?''

''உதைப்படுவே... பர்த்டேவாச்சேன்னு பார்க்கறேன்... உனக்குதான் தெரியுமே... என் டைரியிலே ஃப்ரண்ட்ஸோட பர்த்டேயை குறிச்சு வச்சிருப்பேன். அதைப் பார்த்து சரியா விஷ் பண்ணிடுவேன்.''

''நல்ல விஷயம்!''

''இருக்கட்டும்... என்னாச்சு உன் மொபைலுக்கு?''

''ஏன்?''

''காலைலேர்ந்து எத்தனை முறை போன் பண்றது? ஸ்விட்ச் ஆப்னே வருது!''

''ஆப் பண்ணி வச்சா அப்படித்தானே வரும்?''

''ஏன் ஆப் பண்ணி வச்சே?''

''சில சங்கடங்களை தவிர்க்கத்தான்!''

''லஞ்ச் முடிச்சிட்டியா? உன்னோட வெளியே சாப்பிடணும்னு நினைச்சேன். ஜஸ்ட் ஒரு சின்ன ட்ரீட் தரலாம்னு!''

''சாப்பிட்டேன் ரஞ்சித்... எனிவே தாங்க்ஸ்'' என்றான் பசியுடன்.

அவன் சாப்பிடவில்லை. வீட்டிற்குப் போய் மதுவின் சமையலை சாப்பிட மனம் விரும்பவில்லை. அதே சமயம், சமைத்து, தனக்காக பசியுடன் அவளும் காத்திருக்கும் போது... தான் மட்டும் சாப்பிடுவது மனிதாபிமான செயலாக தெரியவில்லை.

இரவு பதினோரு மணிக்கு வீடு திரும்பிய போது... அவனுக்காக அனைவரும் காத்திருந்தனர்.

அங்கு மதுரிமா இல்லை.

# 4

'**எ**ப்போது எதுவும் கேட்க வேண்டாம்' என்று கண்ணசைப்பில் சொன்ன ராஜலட்சுமிக்கு மரியாதை கொடுக்கும் பொருட்டு கோபியும், சுப்ரியாவும் தங்கள் அறைக்குத் திரும்பினர்.

அறைக் கதவு உள்தாழிடப்பட்ட பின், ''சாப்பிட்டியா திலக்?'' என்றாள் ராஜலட்சுமி.

''ம்... ஆச்சும்மா... ஒரு டம்ளர் மோர் மட்டும் கொடு!''

''சித்த உக்காரு... அங்கே வேணாம், டைனிங் டேபிளுக்கு போ... வந்துட்டேன்!''

அடுத்த ஐந்து நிமிடத்தில் டம்ளருடன் வந்து, மகன் எதிரே அமர்ந்தார்.

டியூப் லைட்டை போட்டதில் அந்த இடம் பளிச்சிட்டது. டேபிள் மீது ஏகப்பட்ட பீங்கான் பாத்திரங்கள்... மூடப்பட்டிருந்தது.

''என்ன இப்படிப் பண்ணிட்டே திலக்?''

''என்னாச்சும்மா?''

''இதையெல்லாம் பார்த்தியா?'' ஒவ்வொரு பாத்திரமாய் திறந்து காண்பித்தாள்.

ஆறிப் போயிருந்தாலும் கமகம வாசனை மூக்கை ஸ்பரிசித்தது.

''.....?!''

''உனக்காக பார்த்து... பார்த்து சமைச்சிருந்தா அந்தப் பொண்ணு!''

''......?!''

''நீ... மதியம் சாப்பிட வந்துடுவேன்னு. கடைசி வரை... அவ சாப்பிடாமலேயே கிளம்பிப் போய்ட்டா தெரியுமா?''

''நான் லஞ்சுக்கு வர்றேன்னு சொல்லவே இல்லையேம்மா!''

''அவ வரச் சொன்னாளே?''

''அவ கூப்பிட்டா நான் எப்படி வந்துட முடியும்? நான் என்னைக்காவது லஞ்ச் சாப்பிட வீட்டுக்கு வந்திருக்கேனா? எனக்கு லஞ்ச் அவர் ஜஸ்ட் அரைமணி நேரம்தான். நான் ஆபீஸ்லேர்ந்து வீட்டுக்கு வரவே நாப்பத்தஞ்சு நிமிஷம் ஆகும். அப்புறம் சாப்பிட்டு, எப்ப கிளம்ப?''

''ஏன் மதுவுக்காக லீவு போடறது?''

''நான் ஏம்மா அவளுக்காக லீவு போடணும்?''

''நீ பேசறதே சரியில்லே திலக். அந்தப் பொண்ணு உம்மேல ரொம்ப பாசமா இருக்கா. அவளுக்காக நீ ஏன் கொஞ்சம்... அனுசரிச்சுப் போகக் கூடாது. நீ வராததால அவ...

அழுதுக்கிட்டே டெல்லி போய்ட்டா!" என்றாள் சற்றே கோபமாய்.

"இதென்னம்மா அநியாயமா இருக்கு? எனக்குன்னு சுய விருப்பு வெறுப்பு இல்லையா? இத்தனை வருஷமா அவ சொல்படி கேட்டா வளர்ந்தேன்? அவதான் முட்டாள்தனமா டெல்லிலேர்ந்து வந்து அலம்பல் பண்றான்னா... நீங்களும் இடம் கொடுக்கறீங்களே! எதுக்கு இந்த வீட்ல எல்லாரும் சேர்ந்து அவளுக்கு தூபம் போட்டுக்கிட்டிருக்கீங்க?" என்று இரைந்தான்.

சற்றே ஆடித்தான் போனாள் ராஜலட்சுமி.

"மது... மதுவுக்கு என்னப்பா குறைச்சல்?"

"குறையப் பத்தியோ... நிறைவைப் பத்தியோ நான் பேச விரும்பலே. அதையெல்லாம் தாண்டி சில விஷயம் இருக்கு. நீங்க எல்லாம் இப்படியெல்லாம் என்னை ஃபோர்ஸ் பண்ணும்போது, இதுவரைக்கும் வராத வெறுப்பு... மதுமேல, இனி வந்துடுமோன்னு தோணுது. விட்ருங்க ப்ளீஸ்!"

அவன் வார்த்தைகளிலிருந்த கடுமையை மீறி கெஞ்சலோ, பயமோ, எதுவோ ஒன்று, அந்த தாயை பதற்றமடைய வைத்தது.

மகனிடம் என்னவோ பிரச்சினை இருக்கிறது என்பதுப் போல் தோன்றியது.

**வே**லையில் மூழ்கிப் போயிருந்தான் திலக். அவசரமாய் ஒரு ப்ரொஸீஜர்... எம்.டி. கைவசம் சேர வேண்டும். எல்லாவற்றையும் ரெடி பண்ணி சிஸ்டத்தை அணைத்தபோது... அலுவலகத்தில் பாதிப்பேர் மதிய உணவை முடித்து விட்டிருந்தனர்.

மதிய உணவிற்கு திலக் ஹோட்டலுக்கு செல்வது வழக்கம்.

பைக் சாவியை எடுத்துக் கொண்டு வெளியில் வந்த போது அவன் பைக் அருகே... கோபி நின்றிருப்பதை பார்த்து நெற்றி சுருக்கினான்.

"அண்ணா... என்ன இங்கே? எப்ப வந்தே?"

"ரெண்டு மணி நேரம் ஆச்சு!"

"ஏன்... உள்ளே வந்திருக்கலாமே. கூப்பிட்டா நான் வந்திருப்பேனே!" என்றான் அங்கலாய்ப்புடன்.

"வந்தேன். அவசரமா நீ முடிச்சு தந்திருக்க வேண்டிய வொர்க் பத்தி... குணசேகரன்னு ஒரு நண்பர் சொன்னார். எனக்கொன்னும் அவசரமில்லே. பர்மிஷன் போட்டுட்டுதான் வந்திருக்கேன். இப்போதைக்கு நான் வந்திருப்பது தெரிய வேண்டாம்னுட்டேன்!"

"பர்மிஷன் போட்டுட்டு...? ஏதாவது பிரச்சினையா?"

"ஏன்... உன்கூட லஞ்ச் சாப்பிட வரக்கூடாதா? நீ சாப்பிடற ஹோட்டல்ல வத்தக்குழம்பு ஃபேமஸ்னு சொன்னாங்க. சாப்பிடணும்னு ஆசை வந்துடுச்சு. கிளம்பிட்டேன். போலாமா?"

கோபியின் நோக்கம் என்னவென்று புரிய... வாய்விட்டு சிரித்தபடி பைக்கை உதைத்தான் திலக்.

**ஹோ**ட்டலில் எல்லா இருக்கைகளும் நிரம்பி இருந்தன. அடுத்த பேட்ச், சாப்பிட... கடைசி கட்ட சாப்பாட்டில் இருந்தவர்களின் டேபிளின் முன் காத்திருந்தது... கொஞ்சம் சங்கடமாகவே இருந்தது.

"சும்மா சொல்லக் கூடாது திலக். வத்தக்குழம்பு மட்டுமல்ல... ஃபுல் மீல்ஸுமே சூப்பர்தான். பர்மிஷன் போட்டுட்டு வந்தது... வீண் போகலே!"

திலக்... தனக்குத் தானே சிரித்துக் கொண்டதை முகம் சொல்லி விட்டது.

"என்ன சிரிக்கிறே திலக்?"

"இல்லே, கேக்க நினைக்கறதை இங்கேயே கேட்டுடறியா? இல்லே வெளியே போய் பேசலாமா?"

"என்ன பேசணும்?"

"ம்ஹூம்.. பல டேக் வாங்கற முகம் உன்னுது. நடிக்க தெரியல... சொல்லிடு... நான் ஒன் அவர் மட்டும்தான் பர்மிஷன் சொல்லி இருக்கேன்!"

"பக்கத்துல ஒரு பார்க் இருக்கில்லே?"

"ம்..."

"அங்கேயே போய்டலாம்!"

பூங்காவில் வயோதிகர்களும், 'குடி'மகன்களும், நாற்பது வயதை தாண்டிய வேலை கிடைக்காத இளைஞர்களும் ரிசர்வ் செய்ததை தவிர, இரண்டு சிமெண்ட் பெஞ்ச் மட்டுமே காலியாக இருக்க... அதில் ஒன்றில் அமர்ந்தனர்.

சில கணங்கள் மௌனமாய் இருந்த கோபி, தம்பியின் கையை சிநேகமாய் பற்றிக் கொண்டு, "சொல்லு திலக்... உன் கல்யாண விஷயமாய் என்ன முடிவு பண்ணியிருக்கே?" என்றான்.

"கல்யாணமா? இப்ப என்ன..."

"அவசரம்னு கேக்கப் போறியா? இது அபத்தமா உனக்குத் தெரியலே? முப்பது வயசு கம்ப்ளீட் ஆயாச்சு. சரியான வயசுல கல்யாணம் பண்ணியிருந்தா... உன் குழந்தை இப்ப ஸ்கூலுக்கு போய்க்கிட்டிருக்கும்."

"இல்லேண்ணா... எனக்குன்னு ஒரு எய்ம் இருக்கு. நான் படிச்ச படிப்பை வீணாக்காம சொந்தமா கம்பெனி ஆரம்பிச்சு நடத்தணும். பேங்க்ல கூட லோன் போட்டிருக்கிறேன்... உனக்கும் தெரியுமேண்ணா"

"இது எந்தளவுக்கு சாத்தியம்? கம்பெனிய சென்னையில ஆரம்பிக்கப் போறேங்கிறே... அம்மா சம்மதிப்பாங்கன்னு நினைக்கறியா?"

"மது டெல்லியில வேலை பார்க்க அவங்க பேரண்ட்ஸ் சம்மதிக்கலையா? வேற வழியில்லே... அம்மாவும் சம்மதிச்சுதான் ஆகணும்."

"சரி... இது அடுத்த தலைவலி. அப்புறம் பார்த்துக்கலாம். அம்மா உன்னை நினைச்சு அழறாங்க திலக். மதுவை உனக்கு பிடிக்கலேன்னு புரியுது. அவ வேண்டாம்... ஒக்கே! வேற யாரையாவது லவ் பண்றியா?"

"அ... ண்... ணா!"

"இதுக்கேன் ஷாக்காகிறே? லவ் பண்றதா இருந்தா சொல்லு... ஜாதி, அந்தஸ்துன்னு வித்தியாசம் இருந்தாலும், அம்மாகிட்டே சொல்லி முடிக்கிறேன்" என்றான் மென்மையான சிரிப்புடன்.

"அ... அப்படி எதுவும் இல்லேண்ணா. எ... என் எண்ணமெல்லாம் பிஸினஸ்

# எச்சரிக்கை மனிதன்!

**ஆ**ஸ்திரியா நாட்டு தலைநகர் வியன்னாவில் நான்கு மாடி கட்டிடத்தில், இரண்டாவது மாடியின் ஓரத்தில், க்ரே வண்ணத்தில் கோட்டு - சூட்டு அணிந்த ஒருவர் தலையில் தொப்பி. கையில் சூட்கேசுடன் கீழே குதிப்பது போல எப்போதும் காணப்படுவார். திடீர் என்று பார்ப்பவர்களுக்கு அய்யோ இவர் தற்கொலை செய்து கொள்ளப் போகிறாரோ என்ற அச்சம் தோன்றும. ஆனால் உண்மையில் அது மனிதரில்லை. அதுவொரு மனித சிலை.

ரொனால்ட் கோட்ரிஸ்க்ச் என்ற சிற்பிதான் இந்த சிலையை வடிவமைத்தவர். இந்த கட்டிடத்தில் அடுத்த ஆண்டு முதல் ரியல் எஸ்டேட் வியாபாரம் தொடங்கப்பட உள்ளது. ஆகவே மனிதர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக இச்சிலையை கட்டிடத்தின் விளம்பில் நிற்பது மாதிரி வடிவமைத்து இருப்பதாக கூறும் ரொனால்ட், இச்சிலைக்கு 'நம்பிக்கை மனிதன்' என்று பெயர் வைத்திருககிறார்.

வர்த்தகத்தில் ஏற்றம், இறக்கம் இருக்கத் தான் செய்யும். அதற்காக தற்கொலை எண்ணத்துக்கு போய் விடக்கூடாது என்பதற்கான எச்சரிக்கை மணியாகவும் இச்சிலை உள்ளது என்கிறார் இவர். நல்ல சிந்தனைதான்.

- பாலாஜி.



பத்திதான். அது முடிஞ்சதும் இதைப் பத்தி பேசுவோம். ப்ளீஸ்ண்ணா... அதுவரைக்கும் என்னை ஃப்ரீயா விட்ருங்க" என்றான் கெஞ்சலாய்.

கோபி ஆறுதலாய் தட்டிக் கொடுத்து விட்டு சென்றான்.

அவன் சென்றபின் காய்ச்சல் வந்து விடும்போல் அலைடித்தது.

'எனக்கே இத்தனை பிரச்சினைகள் வரும்போது... பெண்ணான உனக்கு இன்னும் அதிகமான பிரச்சினைகள் வருமே! எப்படி சமாளிக்கிறாய்? எங்கே இருக்கிறாயடி பெண்ணே... எங்கே இருக்கிறாய்?'

கண்கள் வெப்பத்தில் வியர்த்தன.

## 5

பிரபல ஜவுளிக்கடை அது!

துணி எடுக்க ஒரு இடம், பில் போட ஒரு இடம், பணம் செலுத்த, பொருட்களை பெற்றுக் கொள்ள என்று தனித்தனி இடம். கையில் தண்ணீர் பாட்டிலோடு கிறுகிறுத்துப் போய் ஒரு மூலையில் அமர்ந்து விட்டாள் கமலா.

"என்னத்தே... மயக்கமாயிருக்கா?"

"சும்மா தொணதொணக்காம, பணத்தை கட்டிப்புட்டு கிளம்பற வழியைப் பாரு. நம்ம ஊர்லேயே எடுத்துக்கலாம்னு சொன்னேன்... கேட்டியா? இந்த கடையிலதான் எடுத்தாகணும்னு வீம்பு புடிச்சே... திருவிழா கணக்கா... இங்கிட்டு, அங்கிட்டுன்னு அலைய விடறாங்களே! எடுத்தமா, வந்தமான்னு இல்லாம...சே...!"

"அவ்வளவுதான்... பணம் கட்டியாச்சு... பார்சல் எடுத்துட்டு வந்துடறேன்!" தேவி ரசீதை எடுத்துக் கொண்டு அடுத்த பாட்ச்சிற்கு ஓடினாள்.

தலையில் அடித்துக் கொண்டாள் மாமியார் கமலா.

ஐந்து நிமிடத்தில் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு வந்த துணிப்பைகளை பார்த்து சிரித்தாள் கமலா.

"என்ன முட்டாள் ஜென்மமடி... நீ?"

"........?!"

"என்ன அப்படிப் பார்க்கிறே? காரைக்குடியிலே பட்டுப்புடவைகளே இல்லையா? இங்கே விலை குறைச்சல்னு இம்புட்டு அள்ளிட்டு வர்றே! இதை பஸ்ல தூக்கிட்டுப் போக முடியுமா? திருவல்லிக்கேணிக்கு ஆட்டோவுலதானே தூக்கிட்டுப் போகணும்? ரெயிலேறி காரைக்குடியில இறங்கினாலும் ஆட்டோவுலதான் போகணும். சார்ஜ் என்னாகிறது? கணக்குப் போட்டுப் பாரு படிச்சவளே... இந்த படிக்காத பெரியவ சொல்றது புரியும்."

"எல்லாம் சரிதான். அதுக்காக எல்லாரும் திரும்பிப் பார்க்கற மாதிரி, இவ்வளவு சத்தமாகவா பேசறது?" முணுமுணுத்தவள் அமைதியாக நடந்து வந்தாள்.

"என்ன அமைதியாய்ட்டே?"

"மயக்கமாயிருக்குன்னீங்களே... ஹோட்டல்ல சாப்பிடறீங்களா?"

"வேணாம்... வேணாம். என் பொண்ணு வீட்லயே போய் சாப்பிட்டுக்குவோம்."

"சரி..."

ஒரு ஆட்டோவை பேசி அமர்த்திக் கொண்டு திருவல்லிக்கேணி புறப்பட்டனர்.

"ஆட்டோவுக்கு எவ்ளோ பேசினே?" மாமியார் கிசுகிசுத்தாள்.

"ஐய்யோ... அத்தே! சென்னையிலே எல்லாமே கொஞ்சம் ரேட் அதிகம்தான். நம்ம ஊரு நிலவரம் வேற, சென்னை வேற..."

"ஆமான்டியம்மா... நீ எனக்கு சொல்லிக் குடு. இந்த கண்றாவிக்குதான்... இதையெல்லாம் நம்ம ஊர்லேயே எடுத்துக்கலாம்னேன். கேட்டியா? தண்டச் செலவு."

தேவிக்கு எப்படா வீடு போய் சேருவோம் என்றாகி விட்டது.

அவளின் இரண்டாவது மச்சினருக்கு திருமணம்.

கமலாவின் மூத்தமகள் சென்னையில் திருவல்லிக்கேணியில் இருக்கிறாள். அவளுக்கு திருமண அழைப்பிதழ் தருவதற்காக மாமியாரும், மருமகளும் நேற்று வந்திருந்தனர். அப்படியே தான் உட்பட மற்ற உறவுப் பெண்களுக்கும் பட்டுப்புடவைகளும், இதர உடைகளும் இங்கிருந்தே வாங்கிச் சென்று விட வேண்டும் என்ற திட்டத்தோடுதான் வந்திருந்தாள் தேவி.

கமலாவிற்கு பத்து ரூபாய் செலவு செய்தாலே கண்ணுப் பொறுக்காது. பதினைந்து முறையாவது சொல்லிக் காட்ட வேண்டும். அப்படியொரு குணம். தேவிக்கு பழகிவிட்டது. அதனால் அதை பெரிதுபடுத்தவில்லை.

மாமியார் பக்கம் திரும்பாமல் இடது பக்கம்



பார்வையை திருப்பி.... வெளிக்காட்சிகளை பார்த்துக் கொண்டு வந்தாள்.

மவுண்ட் ரோடில்...

சிக்னலில் ஆட்டோ நின்றபோதுதான்.... அவளைப் பார்த்தாள்.

ஆட்டோ ஸ்டாண்டில் டிரைவரிடம் பேசிக் கொண்டிருந்தது... சஞ்சனாதானே? அட... ஆமாம்... அவளே தான்!

அவள் இயக்கம் மொத்தமும் பரபரத்தது.

"ஏய்... சஞ்சனா..."

"யாரைக் கூப்பிடறே?" திடுக்கிட்டு அவள் பக்கம் திரும்பினாள் கமலா.

"என் கூட படிச்ச ஃப்ரண்ட் அத்தை... சஞ்சனா"

காதில் விழவில்லை.

"டிரைவர்... அந்த ஸ்டாண்ட் கிட்ட நிறுத்துங்க. இவங்களை... நான் சொன்ன அட்ரஸ்ல கொண்டு விட்ருங்க... இந்தாங்க..." என்று பேசின தொகையை டிரைவரிடம் கொடுத்தாள்.

"ஏய்... என்ன விளையாடறியா? யாரோ, முன்னே பின்னே தெரியாதவனோட அனுப்பி வைக்கறியே... அறிவிருக்கா?"

"என்ன பெரியம்மா... எல்லாரையும் ஒரே மாதிரி எடை போடலாமா? அந்தப் பொண்ணுதான் ஏதோ அவசரம்னு போகுதே... சரிம்மா... என் ஆட்டோ நம்பரை நோட் பண்ணிக்க... பெருசுங்களே இப்படித்தான்... நல்லதுக்கே காலமில்லே."

"ரொம்ப தாங்க்ஸ்ங்க... நோட் பண்ணிக்கிட்டேன். பத்திரமா அவங்களை சேர்த்துடுங்க. அத்தே... வீட்டுக்குப் போனதும், அண்ணிய எனக்கு போன் பண்ணச் சொல்லுங்க... நான் வந்திடறேன்..." என்று அவள் ஓடத் துவங்க...

சஞ்சனா... ஆட்டோவில் ஏறிப் பறந்து விட்டாள்.

"ஆட்டோ... அதோ... அந்த ஆட்டோவை ஃபாலோ பண்ணுங்களேன்!" வேறு ஆட்டோவில் ஏறினாள்.

"ஏம்மா... பர்ஸ், கிர்ஸுன்னு கொள்ளைக் கொடுத்துட்டியா?"

"ஐயோ... அவ என் ஃப்ரண்டுங்க... சீக்கிரம் போங்க!"

"அப்படியா... ஸாரிம்மா... புட்சிடலாம்மா..." வேகமாய் செலுத்தி. ஐந்து நிமிட சேஸிங்கிற்கு பிறகு அந்த ஆட்டோவை வழிமறித்து நிறுத்தினார்.

பணத்தை கொடுத்த தேவி, சஞ்சனாவிடம் குனிந்தாள்.

"ஏய்... சஞ்சனா?"

திடீரென்று ஆட்டோவிற்குள் தலை நுழைத்து அழைத்ததும் தூக்கிவாரிப் போட்டது சஞ்சனாவிற்கு.

"தே... தேவி..."

"உன்னை விரட்டிப் பிடிக்கறதுக்குள்ளே நாக்கு வெளியே தள்ளிடுச்சு."

"எப்ப வந்தே சென்னைக்கு?"

"இப்படியே பேசி முடிச்சிடலாமா?"

"ஸாரிடி..." என்றவள் ஆட்டோவை கட் பண்ணி விட்டு இறங்கி நடந்தாள்.

"என்ன தேவி இங்கே?"

"மச்சினருக்கு கல்யாணம்... இங்கே திருவல்லிக்கேணியிலே நாத்தனார் வீடு. இன்விடேஷன் குடுக்க வந்தோம்."

"உங்க ஹஸ்பண்டும் வந்திருக்காரா?"

"அவருக்கு லீவு கிடைக்கலை. தவிர, கல்யாண நேரத்திலே வேற தொடர்ந்தாற்போல லீவு போட வேண்டி வரும். அப்ப சிக்கலாகி விடக் கூடாது. அதனாலதான் நானும், மாமியாரும் வந்தோம்..." என்றபடி, அவளை சேஸிங் பண்ணி பிடித்ததுவரை விளக்கமாய் சொன்னாள் தேவி.

சிரித்தபடி அவள் கையை பற்றிக் கொண்டாள் சஞ்சனா.

"தாங்க்ஸ் தேவி. உன்னை மறுபடி பார்த்ததற்கு. ஏழு வருஷமாயிடுச்சு இல்லே... நாம பார்த்துக்கிட்டு."

"ம்... கிட்டத்தட்ட! காலேஜ் படிப்போட சரி. உன் கல்யாணத்துக்கு என்னால வரமுடியலே."

"என்ன பண்றது? எனக்கு சென்னையிலே கல்யாணம். உனக்கு காரைக்குடியிலே... லேடீஸ்ங்கறதால... நம்மால நினைச்ச இடத்துல கலந்துக்க முடியாதில்லையா? சரி... நம்ம ஃப்ரண்ட்ஸ் குரூப்ல வேற யாரையாவது பார்த்தியா?"

"ப்ச்... ஒவ்வொருத்தரும்... ஒவ்வொரு மூலையிலே! எங்கே பார்க்கறது? பசிக்குது... வாயேன் சாப்பிட்டுக்கிட்டே பேசலாம்."

"மந்தைவெளிலதான் எங்க வீடு... வாயேன்... அங்கே சாப்பிட்டுக்கலாம்!"

"இன்னொரு முறை வர்றப்ப கண்டிப்பா

வர்றேன். இப்ப நம்ம பிரைவஸியிலே யாரும் தலையிட வேண்டாமே! தவிர, மாமியார் எனக்காக வெயிட் பண்ணுவாங்க!"

"ஓக்கே... டன்!" என்றபடி வசந்த பவனில் நுழைந்தனர்.

சாப்பிட்டபடி... பரஸ்பரம் கணவர், குடும்பம் பற்றி பேசிக் கொண்டிருந்த தேவி சட்டென குரலை தழைத்து, "திலக் எங்கே இருக்கான்னு தெரியுமா சஞ்சனா?" என்று பெருமூச்சுடன் கேட்டாள். அதில் காதல் உறைந்திருந்தது.

சஞ்சனா திகைத்துப் போனாள்.

தேவி திலக்கை நேசித்ததை அவள் அறிவாள். 'ஆனால், இன்னுமா?'

"இ... இல்லை!" என்றாள் நடுக்கமாய்.



## 6

சஞ்சனா பால் தம்ளருடன் அறைக்குள் நுழைந்து கதவை தாழிட்டாள்.

உதயகுமார் 'அவுட்லுக்'கை மேய்ந்துக் கொண்டிருந்தான்.

"போதும் படிச்சது... நேரத்துக்குப் படுங்க..." என்றபடி தம்ளரை நீட்டினாள்.

வாங்கிப் பருகிய உதய் புத்தகத்தை மூடி வைக்க, டியூப் லைட்டை அணைத்து ஜீரோ வாட் பல்பை எரிய விட்டாள்.

நடுவில் படுத்திருந்த ஐந்து வயது மகள் பிரவீணாவை சற்றுத்தள்ளி படுக்க வைத்த உதய், "என்ன பண்றது சஞ்சு, உன்னைப் படிக்க விட மாட்டேங்கறே... டயர்டாயிருக்குங்கன்னு எப்ப பார்த்தாலும் ஒரே டயலாக்கை சொல்லி விலக்கி வைக்கிறே... அதனால் புக்கை படிக்கிறேன்."

"ஏங்க... காலையிலே நேரத்துக்கு எந்திரிச்சாலும்... பல சமயம் சாப்பிடாமலே கிளம்பிடறீங்க. அதான்... தூங்குங்கன்னு சொல்றேன்."

"நீயும் நேரத்துக்கு வந்து படுக்கணுமில்லே?"

"நான் நினைச்ச உடனே வந்து படுத்துட முடியாதுங்க. காலைக்கு தேவையான காய்கறிகளை நறுக்கி, சமையலறையை சுத்தம் பண்ணிட்டு, பாத்திரம் தேய்ச்சிட்டு வர வேணாமா?"

"பாவம்டி நீ... படிச்சவளாயிருந்தாலும் முகம் சுளிக்காம எல்லா வேலையும் செய்யறே? வேலைக்கு ஆள் வச்சுக்கலாம்னு சொன்னாலும் கேட்டுக்கறதில்லை. பொட்டைப் பிள்ளைய பெத்தாச்சு. அதுக்குன்னு சேர்க்க வேணாமான்னு கிழவி மாதிரி பேசறே?" அவளை தன்னருகே இழுத்து கழுத்தில் முகம் புதைத்தான்.

"இந்த கிழவிப் பேச்சு இப்ப புரியாது. இன்னும் பதிமூணு வருஷம் போனாத் தெரியும்"

"ஒரு பேச்சுக்கு கிழவின்னு சொன்னா... என் ஏஞ்சலும் அப்படியே சொல்லணுமா?"

"போட்டு இறுக்காதீங்க. இப்பல்லாம் ரொம்ப டயர்டாயிடறேன். நாளைக்கு டாக்டர்கிட்டே போகணும்ங்க!"

"அப்ப பர்மிஷன் போட்டுட்டு வரட்டுமா?"

"வேணாங்க... ஏழெட்டாகும். நீங்க ஆபீஸ் முடிஞ்சே வாங்க."

"இன்னொருத்தன்கிட்டே கைகட்டி வேலை செய்யறதால... என் செல்லத்துக்கு கூட டைமை ஸ்பெண்ட் பண்ண முடியறதில்லே."

"........?!"

"படிக்கறப்பவே சொந்தமா தொழில் பண்ணணும்னு ஆசை, கனவு! ஆனா, அப்பாவுக்கு வரவேண்டிய சொத்து கைக்கு வராம பங்காளிங்க ஏமாத்தி எடுத்துக்கிட்டதால... என் ஆசையெல்லாத்தையும் குழிதோண்டி புதைக்க வேண்டியதா போச்சு." உதய்யின் கண்களில் ஏக்கம் விரவியிருந்தது.

அவன் மனம் புரிந்தவளாய்... சாமர்த்தியமாய் பேச்சை மாற்றினாள்.

"தேவிய இன்னைக்கு சந்திப்பேன்னு கொஞ்சம்கூட நினைக்கலைங்க..."

"அட... ஆமாம்... சாப்பிடறப்ப நீ உன் ஃப்ரண்ட் பத்தி பேசினே இல்லே? சொல்லு... சொல்லு. இப்ப எங்கே இருக்கா... இங்கே எங்கே வந்தா?"

"திருச்சியில ஒண்ணா சேர்ந்து படிச்சோம். காரைக்குடி சொந்த ஊர். சொந்தத்திலேயே மாப்பிள்ளை! அதே ஊர்ல செட்டிலாய்ட்டா. மச்சினனுக்கு கல்யாணமாம். அதுக்காக சொந்தக்காரங்களுக்கு இன்விடேஷன் தர சென்னை வந்திருக்கா. வழியிலே என்னை பார்த்துட்டு ஆட்டோ சேஸிங் நடத்தி என்னை பிடிச்சிட்டா."

"ரொம்ப க்ளோஸ் ஃப்ரண்டா?"

"இல்லையா பின்னே? ஒரே ஹாஸ்டல், ஒரே கிளாஸ், ஒரே அமர்க்களம்தான்!"

"அப்பேர்ப்பட்ட ஃப்ரண்டை வீட்டுக்கு ஏன் அழைச்சிட்டு வரலே?"

"அவளுக்கு ஏதுங்க நேரம்? கூப்பிடாம இருப்பேனா? இன்னைக்கே ஊருக்கு கிளம்பறாங்க."

"பெரும்பாலும் படிக்கறப்ப, பொண்ணுங்களும் சரி, பசங்களும் சரி நைன்ட்டி பர்சன்ட் காதலிக்கறாங்க. ஆனா, அதுல பத்து பர்சன்ட் தான் வாழ்க்கையில ஒண்ணு சேர்றாங்க. உன்னை பத்தி எனக்குத் தெரியும். தேவி எப்படி? யாரையாவது லவ் பண்ணினாளா?"

"இதெல்லாம் எதுக்கு உங்களுக்கு? பேசாம படுங்க... நேரமாச்சு." அவன் பேச்சிற்கு அணை போட முயன்றாள்.



"ப்ச்... தூக்கம் வரலே... கொஞ்ச நேரம் பேசுவோம். இந்த லேடீஸை பத்தி. அவங்க எப்படி எல்லாம் பேசுவாங்க. கிண்டலடிப்பாங்கன்னு தெரிஞ்சுக்க ஆசை! சொல்லேன். தேவி யாரையாவது லவ் பண்ணினாளா?"

"இப்படியொரு ஆசையா உங்களுக்கு? தேவி ஒரு பையனை மனசுக்குள்ளேயே லவ் பண்ணினா... அதை அவ அவன்கிட்டே சொல்லவே இல்லை. கடைசிவரை அவங்க சேரவே இல்லை."

"அடடா... சரி... இப்பவும் அவ. அவனைப் பத்தி நினைக்கிறாளா?"

"இந்த விவரம் எதுக்குங்க உங்களுக்கு?"

"சும்மாதான்... இந்த பொம்பளைங்க மனசு எவ்வளவு ஆழம்னு தெரிஞ்சுக்கலாம்னு..."

உஷாரானாள் சஞ்சனா.

"ஏழு வருஷமாச்சு. கல்யாணமாகி சந்தோஷமா வாழ்ந்திட்டிருக்கா... வேற எந்த நினைப்புமில்லே... தன் குடும்பத்தை தவிர..."

"ஓ! அந்த பையன் பேரென்ன?"

"தி...ல...க்!"

"திலக்கா?" ஆச்சர்யமாய் கேட்டான்.

"..........?!" அந்த குரலில் கண்கள் விரிய கணவனை பார்த்தாள்.

"என் க்ளோஸ் ஃப்ரண்ட் பேரும் திலக்தான். நல்ல பையன். அவன் அட்ரஸை மிஸ் பண்ணிட்டேன். நானும் அவனும் படிக்கறப்ப... ரெண்டு பேரும் ஒண்ணா சேர்ந்து பிஸினஸ் பண்ணி பெரிய அளவில் உயரணும்னு பேசிக்கிட்டிருப்போம். இப்ப அவன் எங்கே இருக்கான், என்ன பண்ணிக்கிட்டிருக்கான்னே தெரியலை. சரி அதைவிடு... தேவிக்கு எத்தனை குட்டிங்க?"

"என்ன... அவளைப் பத்தியே பேசறீங்க? அவ என்ன ஆடா, மாடா? குட்டிப் போட?"

"பொறாமையா என் சஞ்சுக்குட்டிக்கு? எத்தனைப் பொண்ணுங்களை நிக்க வச்சாலும், நீ மட்டும் தனிச்சு தெரிவே. சம்திங் ஸ்பெஷல் என் செல்லத்துக்கிட்டே! தென், குட்டின்னா, எங்க ஆண்கள் உலகத்துலே பெண் என்பதை குறிக்கும் மரியாதையான அடைமொழி! சொல்லு சஞ்சுக்குட்டி, தேவி ஈன்ற குட்டிகள் எத்தனை?"

"ரெண்டு. ஒரு பொண்ணு, ஒரு பையன்!" என்றாள் சிரித்தபடி.

"அப்ப நான் மட்டும் என்ன பாவம் பண்ணினேன்? உன்னை எத்தனை முறை கெஞ்சியிருப்பேன்? நம்ம பிரவீணாவுக்கு ஒரு தம்பியோ, தங்கையோ கண்டிப்பா வேணும். பாவம் அவளும் தனியா இருக்கான்னு... எத்தனை முறை சொல்லி இருப்பேன்?"

"ம்..." என்றாள் குறும்பாய் பார்த்தபடி.

"என்ன... உம்? நேரத்துக்கு வந்து படுத்தாதானே ஏதாவது ஏற்பாடு பண்ணலாம்!" உதய் காதலுடன் அவளை அணைத்தான்.

"சீ... என்ன பேச்சு இது? விடுங்க... ஐயோ இறுக்காதீங்க..." கையை விலக்கி விட்டாள்.

"என்ன சஞ்சு... நான் தொட்டா பிடிக்கலியா?" என்றான் நெற்றி சுருக்கி.

"என் புருஷன் இவ்ளோ கேனையனா இருப்பார்னு நெனைக்கவே இல்லே."

"ஏய்... என்ன... என்னைப் போய்..."

"பின்னே என்னங்க? நாளைக்கு ஹாஸ்பிடலுக்கு போகணும்னு சொன்னேனே... எதுக்காக?"

"டயர்டாயிருக்கேன்னு சொன்னே... அதுக்காக?!"

"கட்டிப் பிடிச்சப்ப... இறுக்காதீங்கன்னு சொன்னேனே... அது எதுக்காக?" உதடுகளை வாய்க்குள் மென்றாள் குறும்பாக.

"அதான்... நான் தொட்டாலே பிடிக்கலேன்னு சொன்னேனே..."

"இந்த புத்திசாலித்தனத்துக்குதான்... என் செல்ல புருஷனை கேனையன்னு சொல்றேன்!"

"திரும்ப... திரும்ப புரியாத மாதிரியே பேசு!"

"சரி... நேரடியாகவே சொல்றேன். நாள் தள்ளிப் போயிருக்கு!"

"எதுக்கு?"

"அடப்பாவி புருஷா... ஒரு புள்ளைய பெத்தமாதிரியா பேசறே! இந்த அழகுல ரெண்டாவது வேற..."

"ஏய்... சஞ்சு... என்ன சொல்றே?"

"ம்... " என்றாள் வெட்கத்துடன்.

"என்ன சஞ்சு... இதைப் போய் இவ்ளோ மெதுவா சொல்றே... எத்தனை வருஷ ஏக்கம் இது? தாங்க்ஸ்டா... தாங்க்ஸ்" அவளை இதமாய் அணைத்து பெருமூச்சு விட்டான்.

"அவசரப்படாதீங்க... நாளைக்கு டாக்டர் கன்ஃபர்ம் பண்ணட்டும்."

## 7

பரபரவென இயங்கிக் கொண்டிருந்தாள் சஞ்சனா.

பிரவீணாவை தலைவாரி... இரண்டு ஜடையிலும் ரிப்பன் வைத்து கட்டி விட்டு, "போய் ஷூவைப் போடு... வேன் வர்ற நேரமாச்சு" என்று அனுப்பி விட்டு, அவள் லன்ச் பேகில் எல்லாவற்றையும் எடுத்து வைத்தாள்.



"சஞ்சனா... தலை வலிக்கறாப்பல இருக்கு... கொஞ்சம் சூடா காபி தர்றியா?" சோபாவில் அமர்ந்து கீரை ஆய்ந்துக் கொண்டிருந்த கஸ்தூரி கேட்டாள்.

உதய்யின் தாய்.

"அஞ்சே நிமிஷம் அத்தே... வேன் வந்திடும். பிரவீணாவை அனுப்பி வச்சிட்டு போட்டு தர்றேனே..." என்றாள் கெஞ்சலாய்.

"ஆமாமா... வேன் வந்திடும்... அவளை கவனிச்சு அனுப்பு மொதல்ல... உதய் எங்கே? ஆபீஸ் போகலே?"

"குளிக்கிறார் அத்தே!"

"மம்மீ..."

"என்னடி?"

"ஷூ லேஸ் காணோம்!"

"ஆமா... எப்ப வந்து கேக்கறே? கழட்டி வைக்கிறப்பவே... ஒழுங்கா வச்சாதானே? ஸ்கூல்லேர்ந்து வரும்போதே... ஷூ தனியாவும், லேஸ் தனியாவும் கழண்டுடுது... சே... ஒரு ஒழுங்கே இல்லே உன்கிட்டே....!" டென்ஷனுடன் மகளை நோக்கிச் சென்றாள்.

பரபரப்பாய் இங்குமங்கும் தேடினாள்.

உதய்யின் ஷூவுக்கடியில் இருந்ததை எடுத்து பிரவீணாவின் ஷூவில் கட்டி முடிக்கவும், வெளியே ஹார்ன் சத்தம் கேட்கவும் சரியாய் இருந்தது.

"மம்மி... வேன் வந்திடுச்சு..."

"ஸ்கூல்பேக் எடுத்துக்க... நான் லன்ச் பேக் எடுத்துட்டு வர்றேன்."

"டாடி... பை!" என்றாள் சத்தமாய்.

"பை...டா செல்லம்!" என்றான் உதய் பாத்ரூமிற்குள்ளிருந்து.

ஒரு வழியாய் மகளை அனுப்பி விட்டு காபி போட்டு மாமியாரிடம் கொடுத்தவள், "டிபன் சாப்பிடற நேரத்துல காபிய குடிச்சிட்டு... அப்புறம் எப்ப டிபன் சாப்பிடறது?" என்றாள்.

"தலைவலி... பொளக்குது சஞ்சனா. ஒரு அரை மணிநேரம் போகட்டும்... சாப்பிடறேன்."

"மாமா எங்கே அத்தை? அவர் கூட சாப்பிடலே."

"அவர் காலையிலேயே ஈஸ்வரமூர்த்தி வீட்டுக்கு கிளம்பி போய்ட்டார். அதான் அவரோட சிம்சன்ல ஒண்ணா வேலை பார்த்தாரே...?!"

"ஓ... ஆமாமாம்!"

"அவருக்கு பைபாஸ் சர்ஜரி பண்ணாங்களாம். வீட்டுக்கு டிஸ்சார்ஜ் பண்ணியாச்சு. பார்த்துட்டு வர்றேன்னு போனார்."

"அவர் வீடு திருவல்லிக்கேணியிலே... எப்ப வந்து சாப்பிடுவார்?"

"மனுஷனுக்கு ரத்னா கஃபே டிபன்னா உயிர். அங்கே எட்டி பார்க்காம வரமாட்டார். சாப்பிட்டுட்டுதான் வருவார்..."

சிரித்த சஞ்சனா, "சரி... அந்த கீரைய குடுங்க... நான் ஆய்ஞ்சுக்கறேன். நீங்க காபி சாப்பிடுங்க."

"பரவாயில்லே... நானே ஆய்ஞ்சுக்கறேன். உதய் குளிச்சிட்டு வந்திடுவான்... டிபன் எடுத்து வை!"

"பத்து நிமிஷத்துல குளிச்சிட்டு வர்றவரா அவரு? அதுக்குள்ளே துணிய காயப் போட்டுட்டு வந்திடறேன்."

துவைத்து வைக்கப்பட்டிருந்த துணிகளடங்கிய பக்கெட்டை எடுத்துக் கொண்டு மாடிப்படியேறினாள்.

பின்னாலேயே கத்திக் கொண்டு ஓடி வந்தான் உதய்.

"சஞ்சு... சஞ்சு..."

"என்னங்க?"

"இப்படிக் குடு அதை? இந்த வேலையெல்லாம் நீ இப்ப செய்யலாமா?"

"இத்தனை நாளும் நான்தானே செஞ்சுக்கிட்டிருந்தேன்!"

"அது அப்ப... இப்ப... இந்த மாதிரி மாடிப்படி ஏறுறது. வெயிட்டை தூக்கறதெல்லாம் ரொம்ப தப்பு. அம்மாகிட்டே சொன்னா காயப்போடப் போறாங்க."

"இதைப் பாருங்க... அவசரப்பட்டு அத்தைக்கிட்டே எதையும் சொல்லிடாதீங்க. ஈவ்னிங் டாக்டரை பார்த்துட்டு கன்ஃபார்ம் ஆன பின்னாலதான் சொல்லணும். பாவம்... அத்தையும் இன்னொரு பேரக்குழந்தை வேணும்னு ஏங்கிகிட்டிருக்காங்க. இப்ப ஆசைய கிளப்பி விட்டுட்டு, அப்புறம் அது இல்லேன்னு டாக்டர் கைய விரிச்சிட்டா... சமாளிக்கறது ரொம்ப கஷ்டம்ங்க..."

"நீ சொல்றதும் சரிதான்! நீ கீழே போ... நான் இதை காயப்போட்டுட்டு வர்றேன்."

"அத்தை தப்பா நினைக்க மாட்டாங்களா?"

"மகன் பொண்டாட்டிதாசனா ஆகிட்டான்னு கொஞ்சம் வருத்தப்படுவாங்க... பரவாயில்லை... சமாளிச்சுக்கலாம்... நீ போ..." என்றான் கண்ணடித்து.

சிரித்தபடி கீழே இறங்கிப் போனாள் சஞ்சனா.

கைராசியான டாக்டர் என்று பெயரெடுத்தவர் மிஸஸ் கல்யாணி சங்கரன்.

சற்றே பெரிய நர்ஸிங் ஹோம்! அனுமதிக்கப்பட்டிருக்கும் பேஷண்ட்டுகளை ஒரு ரவுண்ட் அடித்து விட்டு காலை, மாலை இருவேளைகளில் பார்வையாளர் நேரத்திற்காக ஒதுக்கியிருந்தார். முன்பே அப்பாய்ண்ட்மென்ட் வாங்கிய முப்பது விசிட்டர்களை மட்டுமே பார்ப்பது வழக்கம்.

சஞ்சனாவின் முதல் பிரசவம் இங்குதான் நடந்தது.

யூரின் டெஸ்ட் ரிப்போர்ட்டிற்காக காத்திருந்தாள்.

"மிஸஸ்... சஞ்சனா" கூடிதாரின் மேல் வெள்ளை கோட் அணிந்த இளம்பெண் கதவை திறந்து அழைத்தாள்.

"நான்தான்!"

"உள்ளே வாங்க"

"வாங்க..." கணவனின் கைப்பற்றி எழுந்தாள். மெத்தென்ற அவள் கரத்தில் சின்ன நடுக்கம்.

"சஞ்சு!"

"என்னங்க?"

"டென்ஷனாயிருக்கா?"

"ம்..."

"கூல் டவுன்! ரிசல்ட் எதுவாய் இருந்தாலும் ஐ லவ் யூ! எனக்கு நீதான் முக்கியம். ஒக்கே!"

"ம்" என்றாள் சின்ன சிரிப்புடன்.

கதவை திறந்து உள்ளே சென்றாள்.

ஐம்பதை தொட்டு விட்ட கல்யாணி சங்கரன் இருபது வயதை உடற்பயிற்சியின் மூலம் விழுங்கி விட்டு சிக்கென்றிருந்தாள்.

"வா... சஞ்சனா! நீங்களும் உட்காருங்க மிஸ்டர் உதய்!"

"டாக்டர் ரிசல்ட்!"

"என்ன அவசரம்? சொல்லதானேப் போறேன்..." என்று நட்புடன் புன்னகைத்தவள் சில கணங்கள் அவளையே பார்த்து விட்டு கையை நீட்டினார்.

"கங்க்ராஜுலேஷன்ஸ்... ரிசல்ட் பாஸிட்டிவ் தான்!"

அவள் கையைப் பற்றி குலுக்கிய சஞ்சனா



"தாங்க்யூ... தாங்க்யூ டாக்டர்" என்று நெகிழ்ந்தாள்.

உதய் வார்த்தைகள் வராமல் உற்சாகத்தில் மிதந்தான்.

"பெரியவளுக்கு அஞ்சு வயசு ஆயிடுச்சா?"

"ஆமாம் டாக்டர்!"

"முதல் டெலிவரியே கொஞ்சம் ரிஸ்க்காகதானே இருந்தது! அதனாலதான் முடிஞ்சவரைக்கும் ரெண்டாவது குழந்தை வேண்டாம். அப்படியே கண்டிப்பா வேணும்னு நெனச்சா... அஞ்சாறு வருஷம் இடைவெளி இருக்கணும்னு சஜஸ்ட் பண்ணினேன். எனிவே... இப்பவும் நீ வீக்காதான் இருக்கிறே! கர்ப்பப்பை கீழிறங்கி இருக்கு. அலைச்சல் கூடாது. கடினமான வேலையோ, வெயிட்டோ தூக்கக் கூடாது. குழந்தை பிறக்கிறவரை கேர்ஃபுல்லா



## நகம் வளர்ப்பதிலும் உலக சாதனை!

லிரெட்மாண்ட், அமெரிக்க பெண்மணி. சால்ட்லேக் சிட்டியில் வசிக்கிறார். 68 வயதாகிறது. 30 வருடமாக விரல் நகங்களை வெட்டாமல் 28 அடி 4 அங்குல நீளம் வளர்த்து கின்னஸ் உலக சாதனை புத்தகத்திலும் இடம் பெற்று விட்டார். அடுத்த ஆண்டு வரவிருக்கிற கின்னஸ் சாதனை புத்தகத்திலும் இவரது பெயர் சகசாதனையாளரான மெல்வின்பூத்துடன் இடம்பெற இருக்கிற நேரத்தில், கார் விபத்து ஒன்றில் இவரது விரல் நகங்கள் சேதம் அடைந்து விட்டன. இதனால் வேறு வழி இல்லாமல் நகங்களை வெட்டிவிட்டார்.

இருந்தாலும் நகத்தின் மீது இருக்கும் மோகம் இவரை விடவில்லை. மீண்டும் நகங்களை வளர்க்க ஆரம்பித்து விட்டார். இப்போது இவரது விரல் நகங்களின் நீளம் 4.5 அங்குலம். மீண்டும் உலக சாதனைக்கு முயற்சியா? என்று இவரிடம் கேட்டால், அதற்கு வயது இடம் கொடுக்க வேண்டுமே என்று கவலைப்படுகிறார், நகங்களுக்கு ஆசைப்படும் லிரெட்மாண்ட்.

- சுகன்யா.

இருக்கணும்... சரியா?"

"சரி டாக்டர்" என்றாள் மிரட்சியுடன்.

"பயப்படாதே... பார்த்துக்கலாம்... நான் எழுதித் தர்ற விட்டமின் டேப்லட்ஸெல்லாம் தவறாம போட்டுட்டு வா! இப்ப ஒரு இஞ்ஜெக்ஷன் போட்டுடறேன். போட்ட பிறகு ஒரு பதினஞ்சு நிமிஷம் இங்கேயே ரெஸ்ட் எடுத்துட்டு பிறகு கிளம்புங்க."

"ஒக்கே டாக்டர்!"

சஞ்சனாவிற்கு ஊசி போட்டார். வெளியில் ஒரு பெஞ்சில் அமர்ந்துக் கொண்டாள்.

"நீ இங்கேயே இரு... வெளியே உனக்கு மாத்திரையும், வீட்டுக்கு ஸ்வீட்டும் வாங்கிட்டு வந்திடறேன்."

"சரிங்க!"

## 8

வெளியில் வந்த உதய்க்கு சிறகுகள் முளைக்காத குறை தான். அவனை மீறி உதடுகள் விசிலடிக்க... அந்நேரம் செல்போன் அலறியது.

"ஹலோ..."

"..........."

"ஹேய்..... சொல்லுடா ஹேமந்த்..."

"..........?!"

"ம்ஹூம்... இன்னைக்கு என்னால வரமுடியாது.. நோ... நோ... ப்ளீஸ் டோண்ட் டேக் மீ அதர்வைஸ். என் வொய்ஃபோட ஹாஸ்பிடல் வந்திருக்கேன். உன் புதுக்கடைய நாளைக்கு வந்து பார்க்கிறேனே... ஸாரிடா... ப்ளீஸ்...." என்றவனின் கண்கள் மிக அகலமாய் விரிந்தன.

"மச்சான்... கால் யூ லேட்டர்!" என்று கட் பண்ணியவன் விரைந்து ஓடினான்.

நின்றிருந்த ஆட்டோவில் ஏறப்போனவனின் தோளில் கைவைத்தான்.

அவனோ திடுக்கிடலோடு திரும்ப...

"ஹேய்... உ... உதய்!"

"வாவ்... திலக்! வாட் எ சர்ப்ரைஸ்? உன்னை இங்கே பார்ப்பேன்னு கொஞ்சம் கூட நினைக்கலை. எங்கேடா இங்கே?"

"நீ எங்கே இங்கே? மதுரையிலேர்ந்து எப்ப வந்தே?"

"அது ஆச்சுடா ஆறு வருஷம்! கல்யாணமாகி இங்கே ட்ரான்ஸ்ஃபர்ல வந்து செட்டிலாயாச்சு. உன் அட்ரஸ் கிடைக்காம, காண்டாக்ட் நம்பர் கிடைக்காம தவிச்சுப் போய்ட்டேன். நீ?"

"ஒரு ட்ராவலிங்ல என் சூட்கேஸை மிஸ் பண்ணிட்டேன். அதிலேதான் என் செல்போன், டைரி உட்பட எல்லாமே... எல்லாமே போச்சு. பழைய ஃப்ரண்ட்ஸ் யாரையும் டச் பண்ண முடியாத சூழ்நிலை."

"தாராபுரத்துலதானே இருக்கே?"

"இல்லேடா... சில பிரச்சினையினால பெங்களூருல செட்டிலாய்ட்டோம். அண்ணனுக்கும் அங்கேதான் வேலை... எனக்கும் அங்கேதான்!"

"வொர்க் பண்ணிட்டிருக்கியா என்ன?" ஆச்சர்யமாய் கேட்டான் உதய்.

"ஆமாம் உதய்... என் கனவை நனவாக்க முடியாத சூழ்நிலை... ஆனா, இப்பதான் எல்லாமே கூடி வந்திருக்கு. நான் இப்ப சென்னைக்கு வந்திருப்பது கூட ஸ்பாட் ரிக்கு இடம் பார்க்கறதுக்குதான்!"

"நீ சொல்றது உண்மையா திலக்?"

"அதிலென்ன சந்தேகம்... சரி, நீயும் என்னை மாதிரி சொந்தமா பிஸினஸ் பண்ணணும்னு வெறியோட இருந்தியே... என்ன பண்ணிட்டிருக்கே?"

"உன்னை மாதிரிதான்! பிரைவேட்ல வொர்க் பண்ணிட்டிருக்கேன்."

"ஏன் நாம ரெண்டுபேரும் சேர்ந்து பிஸினஸ் பண்ணக் கூடாது?"

"திலக்... நிஜமாகவா சொல்றே?"

"எல்லாமே சந்தேகம் தானா?"

"ரொம்ப சந்தோஷம்டா! என் ரெண்டாவது குழந்தை உருவான நேரம்... எல்லாமே நல்லதே நடக்குது."

"என்னடா சொல்றே?"

உதய் தன் மனைவி கர்ப்பமாய் இருப்பதை சொன்னான்.

"ஜஸ்ட்... இப்பதான் டாக்டர் கன்ஃபர்ம் பண்ணாங்க. ஸ்வீட் வாங்க வெளியே வந்தேன். உன்னைப் பார்த்தேன். ஆமா உனக்கு கல்யாணம்..."

"இன்னுமில்லே!"

"இன்னுமா?"

"அதைவிடு! கங்க்ராஜுலேஷன்ஸ்... ரெண்டாவது முறையா அப்பாவாகப் போறதுக்கு!"

"வாயேன்... உள்ளே என் வொய்ஃப் இருக்கா. இன்ட்ரடியூஸ் பண்றேன்!"

"இல்லேடா... ஆல்ரெடி லேட்! டிரெய்னை பிடிக்கணும். நான் வீட்டுக்கே வர்றேன். நிறைய பேசணும். உன் செல்நம்பர் குடு!"

"ஒக்கே..." என்றவன் நம்பர் சொல்ல...

சேவ் பண்ணிக் கொண்டவன், "மிஸ்டு கால் தர்றேன். என் நம்பரை சேவ் பண்ணிக்க" என்றான் திலக்.

"ஒக்கேடா... நாம சீக்கிரம் சந்திப்போம்!"

"சந்திப்போம் என்ன? இனி... எப்பவும் நாம ஒண்ணாதான் இருக்கப் போறோம். ஸீயூ...பை...டா!"

"பை..."

திலக் ஆட்டோவில் ஏறி அமர...உறுமிக் கொண்டு புறப்பட்டது.

உதய்... ஆட்டோவையே பார்த்துக் கொண்டு நிற்க... சஞ்சனா அவன் தோளைத் தொட்டாள்.

"என்னங்க... இங்கேயே நிக்கறீங்க?"

"நீ ஏன் வெளியே வந்தே?"

"ரொம்ப நேரமாச்சேன்னு... காணாம வெளியே வந்தேன். இங்கே வந்தா... வேடிக்கைப் பார்த்துட்டு நிக்கறீங்க!"

"சேச்சே... வேடிக்கைப் பார்க்கலே... சொன்னா ஆச்சர்யப்படுவே! நேத்து என் ஃப்ரண்டை பத்தி பேசிட்டிருந்தோமே.. அவனைப் பார்த்தேன்!"

"ஃப்ரண்டா? யாரது?"

"திலக்!"

"தி...ல...க்?!"

"பாரேன்... உனக்கே ஆச்சர்யமாயிருக்கில்லே? இவ்வளவு நேரம் அவன்கிட்டேதான் பேசிக்கிட்டு இருந்தேன். டிரெய்னுக்கு நேரமாச்சுன்னு கிளம்பிட்டான்."

அவன் பேசுவது எதுவும் காதில் விழவில்லை. தலை கிறுகிறுவென சுழன்றது. அவன்மீது சாய்ந்துக் கொண்டாள்.

"என்னாச்சு சஞ்சு?"

"மயக்கமாயிருக்குங்க!"

"சரி... உன்னை ஆட்டோவுல ஏத்தி விடறேன். பின்னாடியே பைக்ல வர்றேன்... சரியா? சார்... ஆட்டோ...!"

* * *

எதிர்காற்று முகத்தில் சில்லென்று வாரி இறைத்தாலும் சஞ்சனாவுக்கு வியர்த்தது.

'திலக் என்றால்... அவனாய் இருப்பானோ? இல்லை... இருக்காது. அவன் இவர் நண்பராய் இருக்க வாய்ப்பே இல்லை. இருக்காது... இருக்கவும் கூடாது. ஏனிப்படி நடக்கின்றன. நேற்றுதான் தேவியை எதேச்சையாய் பார்த்தேன். திலக் பற்றி பேசினாள். அவரும் திலக் பற்றி பேசினார். இன்று என்னடா வென்றால்... அவனைப் பார்த்தேன் என்கிறார். விசாரிக்க வேண்டும்!' சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

நடுவழியில் ஸ்வீட் வாங்கிக் கொண்ட உதய் ஆட்டோவிற்கு பணம் கொடுத்து அனுப்பி விட்டு சஞ்சனாவை கைப்பற்றி அழைத்து வந்தான்.

"என்ன... என்னாச்சு? அவளை ஆட்டோவுல அழைச்சிட்டு வர்றே... அடிகிடி பட்டுடுச்சா?" பதறிப்போய் கேட்டாள் கஸ்தூரி.

வேலாயுதமும் டி.வி.யை அணைத்து விட்டு எழுந்து வந்தார்.

"என்னாச்சு உதய்? சஞ்சனா டயர்டா தெரியறா!"

"ஒண்ணுமில்லேப்பா.. எல்லாம் நல்ல விஷயம்தான். சஞ்சனா கன்சீவாகி இருக்கா..."

"தெய்வமே... இத்தனை வருஷம் கழிச்சு எங்க வேண்டுதலுக்கு செவி சாய்ச்சிட்டியேப்பா... இப்படி உக்காரு சஞ்சனா... வந்துட்டேன்" மருமகளை சோபாவில்



அமர்த்திவிட்டு, பூஜையறைக்கு ஓடியவள், சம்புடத்திலிருந்து விபூதியை எடுத்து வந்து நெற்றியில் தீற்றினாள்.

"சந்தோஷமாயிருக்கு உதய்... நல்ல செய்திய சொன்னே? பிரவீணா ஒத்தையா தவிப்பாளோன்னு கவலைப்பட்டேன். நல்லவேளை..." மகிழ்ந்தார் வேலாயுதம்.

"இந்தாங்கப்பா... ஸ்வீட் எடுத்துக்குங்க. பயப்படாதீங்க. சுகர் பேஷண்ட் சாப்பிடற ஸ்வீட் இது. தாராளமா சாப்பிடுங்க... அம்மா எடுத்துக்குங்க. பிரவீணா எங்கேம்மா?"

"டியூஷனுக்கு போயிருக்கா... வர்ற நேரம்தான்."

அன்றிரவு...

மனைவியின் தலையை மார்பு மீது சாய்த்துக் கொண்டு மல்லாந்து படுத்திருந்த உதய்... விரல்களால் அவள் கன்னத்தில் கோலம் போட்டான்.

"எவ்ளோ பெரிய பரிசுக் கொடுத்திருக்கேத் தெரியுமா சஞ்சு? ரொம்ப நாளா ஆசைப்பட்டேன். என்னை மாதிரி என் பொண்ணும் ஒத்தையா நின்னுடக் கூடாதுன்னு ஏங்கினேன். காட் இஸ் கிரேட்! என் குழந்தை உருவான நேரம்... என் கனவுகளும், லட்சியங்களும் நிறைவேறப் போகுது."

"என்ன சொல்றீங்க?"

"திலக் சென்னைக்கு எதுக்கு வந்தான்னு நினைக்கிறே?"

"எதுக்கு?"

"தொழிற்சாலை ஆரம்பிக்கறதுக்கு! ரெண்டுபேரும் சேர்ந்து பண்ணலாம்னு சொல்லிட்டான்."

"அ... அவர் எந்த ஊர்?"

"பெங்களூர்ல இருந்து வந்தான்!"

'நல்லவேளை... இவன் அவன் இல்லை!'

* * *

9

எந்திரிக்கவே முடியாதபடி அலுப்பு அவளை அழுத்தியது. உதய்யிடமிருந்து மெல்லிய குறட்டையொலி.. கண நேரம் இடைவெளி விட்டு வந்தது. பிரவீணா கை கால்களை விரித்தபடி தூங்கிக் கொண்டிருந்தாள்.

மணி ஆறாகி விட்டிருந்தது.

இதற்கும் மேல் படுத்திருந்தால்... பிரவீணா கேட்டிற்கு வெளியில் நிற்க வேண்டியிருக்கும்.

எழுந்தவள் பாத்ரூம் சென்று பிரஷ் பண்ணி முகம் கழுவிக் கொண்டு வெளியில் வந்தவள்... துடைப்பத்தையும், பக்கெட்டையும் எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள்.

முகம் மாறியது.

வாசல் தெளித்து... நெளி நெளியாய் கோலம் போடப்பட்டிருந்தது.

வியப்புடன் திரும்பியவள்.... விழிகளை அகல விரித்தாள்.

கஸ்தூரியின் கையில் காபி தம்ளர்.

"இந்தா... சஞ்சனா!"

"அத்தை... என்ன இதெல்லாம்?"

"எல்லாம் உதய் சொன்னான். நீ ரொம்ப வீக்கா இருக்கியாம். குழந்தை பிறக்கிறவரை நீ எந்த வேலையும் செய்யக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்காங்களாம்."

"அதுக்காக...?"

"எனக்கு பொம்பளை குழந்தைன்னா.. அவ்ளோ உசுரு. கடவுள் உதய் மட்டும் போதும்னு கையை விரிச்சிட்டார். எனக்கொரு பொண்ணு இருந்து அவ பிள்ளைத்தாய்ச்சியா அம்மா வீட்டுக்கு ரெஸ்ட் எடுக்க வந்தா... கவனிச்சுக்க மாட்டேனா? நீ மட்டும் யாருடி எனக்கு? பொண்ணு மாதிரி தானே?"

"அத்தே..."

"உங்கம்மா உயிரோட இருந்திருந்தா... அங்கேயாவது அனுப்பியிருப்பேன்! மகராசி போய் சேர்ந்தாச்சு. உங்கண்ணியோட ஆட்சி அங்கே! அவளுக்கு உன்மேல எவ்வளவு பாசம்னு எனக்குத் தெரியாதா? நான் இருக்கும் போது, நீ எங்கேயும் போக வேணாம். சமையல், பிரவீணா, வீடு எல்லாத்தையும் நான் பார்த்துக்கறேன். நீ நல்லா ரெஸ்ட் எடு. சாப்பிட்டு தூங்கு. அப்பப்ப கொஞ்சம் நடந்துக்க..."

"என்ன அத்தை... உங்களுக்கு சுகர் இருக்கு. பிரஷர் இருக்கு... நீங்க இந்த வேலையெல்லாம்...?"

"இருக்கட்டுமே... அதுக்காக எந்த டாக்டர் வீட்டு வேலை எல்லாம் செய்ய வேணாம்னு சொன்னான்? அதுவும் கைகாலுக்கு ஒரு எக்சர்சைஸ் தானே? நீ இருக்கியேன்னு... சாப்பிடறதும், ரெஸ்ட் எடுக்கறதுமா பொழுதை போக்கினேன்."

"என்ன சொன்னாலும் சரி... என்னால வேலை செய்யாம இருக்க முடியாது. நீங்க சின்ன சின்ன வேலை செஞ்சாப் போதும்..."

"இங்கே பார்... ஏய் சஞ்சனா... எங்கேப் போறே? இதோ பாருடி. இச்சன் பக்கம் தலைவச்சுப் படுத்தியோ..."

கஸ்தூரி விரட்ட.... சிரித்தபடி சஞ்சனா

சமையலறை நோக்கி செல்ல... பிரஷ் பண்ணியபடி அறைவாசலில் நின்றபடி இவர்களை பார்த்து சிரித்துக் கொண்டிருந்தான் உதய்.

✻✻✻

பாலை பதமாய் ஆற்றி, அதில் குங்குமப்பூவும் பாதாமும் போட்டு மனைவியிடம் நீட்டினான்.

சிணுங்கியபடி வாங்கிய சஞ்சனா, "இதையெல்லாம் நீங்க செய்யணுமா?" என்று கேட்டாள்.

"உன்னை இந்த நிலைமைக்கு ஆளாக்கினவன், இதைக் கூட செய்யலேன்னா எப்படி?"

"சீச்சீ... என்ன இவ்ளோ அசிங்கமா பேசிக்கிட்டு!"

"புருஷன், பொண்டாட்டிக்குள்ள இதுக்கூட பேசிக்கலேன்னா எப்படி? எங்கம்மா அடிச்சு சொல்றாங்க.. இது ஆண்குழந்தைதான்னு!"

"ஆமாங்க... இது ஆணாப் பிறந்தா சந்தோஷம்."

"நீ பத்திரமா உடம்பை பார்த்துக்கணும். டேப்லட்லை எல்லாம் வேளாவேளைக்கு மறக்காம போட்டுக்க. நிறைய ஃப்ரூட்ஸ் ஃப்ரிட்ஜ்ல வாங்கி வச்சிருக்கேன்... சாப்பிடணும். தினமும் ஒரு கீரை சாப்பாட்ல சேர்த்துக்கணும்... கீரைக்காரம்மா கிட்டே சொல்லிட்டேன். வீட்ல போட்ருவாங்க..."

"ஐயோ போதும் விடுங்க. இந்தப் பிள்ளையால உங்களையும், பிரவீணாவையும் சரியாப் பார்த்துக்க முடியலியேன்னு கவலையாயிருக்கு."

"பிரவீணாவை நான் பார்த்துக்கறேன். என்னை அம்மா பார்த்துப்பாங்க. கவலைய விடு! நாளைக்கு ஞாபகப்படுத்து, திலக்குக்கு போன் பண்ணணும்."

சட்டென... அதுவரை வளைய வந்த சந்தோஷம் காணாமல் போனது... அந்தப் பெயரை கேட்டதும்!

"என்ன சஞ்சு?"

"ம்... சொல்றேங்க..."

"..........?!"

"நீங்க காலேஜ்ல போட்டோவெல்லாம் எடுத்தீங்களா?"

"ஓ..."

"அதிலே உங்க ஃப்ரண்ட் திலக் இருப்பாரில்லே? பார்க்கணும் அவரை!"

"ஏன் சஞ்சு?" வியப்பாய் கேட்டான்.

"அ... ஒண்ணுமில்லே... எப்பப் பார்த்தாலும் அவரைப் பத்தியே பேசிட்டிருக்கீங்களே... அதான்..."

"பொறாமையா? நேர்லயே வருவான். சண்டையே போடு... சந்தோஷப்படுவான்."

"சேச்சே... நான் ஏங்க சண்டைப் போடப் போறேன்?"

"நானும் அவனும் குளோஸ் ஃப்ரண்ட்ஸ். ஆனா எதேச்சையா அமைஞ்சதா, என்ன காரணமோ தெரியல... ஒரு போட்டோ கூட நாங்க சேர்ந்து எடுத்துக்கல..."

"அப்படியா?"

"ஆமாம். பலமுறை நானும்... எடுக்காம மிஸ் பண்ணிட்டோமேன்னு வருத்தப் பட்டிருக்கிறேன். இந்த முறை மிஸ் பண்ண மாட்டேன். என் ஆத்மார்த்த நண்பனோட கண்டிப்பா போட்டோ எடுத்துக்குவேன்."

"நான் கேக்கறேன்னு வித்தியாசமா எடுத்துக்க மாட்டீங்களே!"

பீடிகையுடன் ஆரம்பித்த சஞ்சனாவை தலைநிமிர்த்தி பார்த்தான் உதய்.

"எதைப் பத்தி?"

"இப்ப என்ன குறைச்சல்னு அவரோட சேர்ந்து கம்பெனி ஆரம்பிக்கணும்னு குதிக்கறீங்க? அப்ப பார்த்துக்கிட்டிருக்கிற வேலை?"

"என்ன சஞ்சு... தெரியாத மாதிரி கேக்கறே? சொந்தமா கெமிக்கல் கம்பெனி ஆரம்பிக்கணும்ங்கறது என் லட்சியம். இது இன்னைக்கு நேத்தல்ல... படிக்கறப்பவே உருவான கனவு. அதுக்கு இப்ப வாய்ப்பு வந்திருக்கு... சந்தோஷப்படறதை விட்டு இப்படியொரு கேள்விய கேக்கறே?"

"பார்ட்னர்ஷிப்ல கம்பெனி ஆரம்பிச்ச எத்தனையோ பேரை நானும் பார்த்திருக்கேன்... பாதியிலேயே சரிப்படலைன்னு பிரிஞ்சிடுவாங்க. நீங்க..."

"திலக் பத்தி உனக்கு தெரியாது சஞ்சு. அருமையான நண்பன். எங்க ரெண்டு பேருக்குள்ளும் விட்டுக் கொடுக்கற குணம் அதிகம். ரெண்டாவது, கெமிக்கல் கம்பெனின்னா முதலீடு அதிகமா தேவைப்படும். நான் மட்டுமே தனியா... ம்ஹூம்... சான்ஸே இல்லை..."

"பணத்துக்கு எங்கே போவீங்க?"

"இருக்கவே இருக்கு பேங்க்! லோன் போட்டு ஏற்பாடு பண்ணலாம். ஈ.சி.ஆர். ரோட்ல முக்கால் கிரவுண்ட் நிலமிருக்கே... அதை வித்துடலாம்."

"என்னங்க நீங்க? அதை நம்ம பிரவீணாவோட எதிர்காலத்துக்குன்னு வாங்கிப் போட்டது."

"இருக்கட்டுமே! கம்பெனி நடத்தி... அதை மாதிரி நூறு நிலம் வாங்கிட மாட்டேனா?"

"அப்ப வேலை?"

"என்ன கேள்வியிது? ராஜினாமா பண்ண வேண்டியதுதான்!"

"ராஜினாமாவா?"

"பின்னே?"

"அவசரப்படாதீங்க. லாங் லீவ் மட்டும் எடுத்துக்குங்க!" என்றாள் கெஞ்சலாய்.

"நான் என்ன கவர்மெண்ட்லயா வேலை பார்க்கிறேன் லாங் லீவு போடறதுக்கு? பிரைவேட் கம்பெனி மேடம்!"

"எல்லாம் சரி... இதுக்கு அத்தையும் மாமாவும் சம்மதிப்பாங்களா?"

"கண்டிப்பா... மாட்டாங்கதான்! ஆனா, சில நல்ல விஷயங்கள் வாழ்க்கையில் நடக்கணும்னா பல எதிர்ப்புகளை கடந்துதான் போகணும். பெரியவங்க அப்படிதான் இருப்பாங்க. புரிய வச்சிடுவேன். புரிஞ்சுக்கலேன்னாலும் பரவாயில்லை. இவ்ளோ நேரம் நீ முழிச்சிட்டிருக்கக் கூடாது. படு! நாம திலக் பத்தி பேசிட்டிருந்த நேரம்... அவனுக்கு புரையேறியிருக்கப் போவுது!"


"அது சரி!" என்று நக்கலாய் சொல்லிவிட்டு சஞ்சனா படுத்தாள்.

✻✻✻

# தேள்களின் தோழன்!

தேள்களை வறுத்து சாப்பிடும் தாய்லாந்தில் சுவாங் புவாங் தேள்களுக்கு தோள் கொடுக்கும் தோழனாகி விட்டார்.

- கார்த்திக்.



தாய்லாந்தில் தேள், பூரான் போன்ற வற்றை வறுத்து மொறு மொறுவென்று சாப்பிடுவார்கள். இதற்கென்றே சின்ன சின்ன கடைகள் அங்கு இருக்கும். இப்படி தேள் வறுவல் கடை நடத்தியவர்தான் 38 வயதான சுவாங் புவாங்ஸ்ரீ. புத்தரை வணங்கும் இவருக்கு திடீர் ஞானோதயம் உதித்தது. இனி உயிர்களை கொல்வதில்லை என்று முடிவு எடுத்துவிட்டார். விளைவு கடை மூடப்பட்டது.

பிழைப்புக்கு வழி? கல்லில் செய்யப்பட்ட சிறிய தவளை, ஆமை, எறும்பு மற்றும் புத்தர் சிலையை விற்று ஜீவனம் நடத்துகிறார். இது நாள் வரை தேளைப் பிடித்து வறுத்ததற்கு பிராயச்சித்தமாக, இப்போது உயிருடன் தேள்களை வளர்க்கத் தொடங்கி விட்டார்.

இதற்காக இரண்டு அடுக்கு மாடிவீட்டில் கீழ்ப்பகுதியை தேள்களுக்கென்றே விட்டுவிட்டார். அந்த அறையில் இப்போது 4.600 தேள்கள் உள்ளன. இந்த அறைக்கு வரும் போதெல்லாம் தியானத்தில் உட்கார்ந்து விடுகிறார், சுவாங் புவாங். தேள்களும் இவர் மீது ஏறி இறங்கி விளையாடுகின்றன.

## 10

"உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு திலக்? கைநிறைய சம்பளத்தில வேலை. குடும்பமும் இங்கே இருக்கப்ப... இதையெல்லாம் விட்டுட்டு சென்னையிலே போய் சொந்தமா தொழில் பண்ணப் போறேன்னு சொல்றே? உன் மனசுல நீ என்னதான் நினைச்சிட்டிருக்கே?" ராஜலட்சுமி இதுநாள் வரை இப்படியொரு கோபத்தில் குதித்ததில்லை.

கொஞ்சம் மிரண்டுதான் போனான் திலக். ஆனாலும், உடனே சுதாரித்தான்.

"நான் சொல்றதை கொஞ்சம் நிதானமாக் கேள்ம்மா!"

கோபி எல்லாம் அறிந்தவனாக அமைதியாக இருக்க, சுப்ரியா முகத்தில் திகைப்பு.

"இந்த வேலை கிடைக்கறதுக்கு முன்னாடியே, நாம தாராபுரத்துல இருந்த போதே, படிக்கறப்பவே உண்டான ஆசைம்மா இது! பலரோட சூழ்நிலைக்கு கைப்பாவையா இருந்துட்டேன். இப்பதான் எல்லாத்துக்கும் ஒரு வழி பொறந்திருக்கு. இதோ இருக்கு சென்னை! ரெயிலேறினா நாலஞ்சு மணி நேரத்துல வந்து பார்த்துக்கலாம். உன் ஆசீர்வாதம் ரொம்ப முக்கியம்மா! ப்ளீஸ்... நான் நல்லா முன்னுக்கு வரணும்னு நீதாம்மா வாழ்த்தி அனுப்பணும்."

"இல்லே... இல்லே திலக்... நீ ஏன் சென்னையில போய் செட்டிலாகப் போறேன்னு எனக்கு நல்லாத் தெரியும்" என்றாள் சுப்ரியா.

"இதென்ன புதுக்கதை அண்ணி? நீங்க என்ன காரணம் வச்சிருக்கீங்க?"

"மது இங்கே வந்து உங்களை டிஸ்டர்ப் பண்றான்னு தானே?"

வாய்விட்டு சிரித்தான் திலக்.

"அது சரி! டெல்லிலேர்ந்து பெங்களூரு வரத் தெரிஞ்சவனுக்கு சென்னைக்கு வரத் தெரியாதா? பாருங்கண்ணி, என் கனவு, லட்சியம் எல்லாமே சொந்தமா தொழில் பண்ணி நிறைய பேருக்கு வேலைத் தரணும்னுதான்! அண்ணா... உனக்குத் தெரியுமே... இவங்க ரெண்டு பேருக்கும் சொல்லி புரிய வைங்க ப்ளீஸ்..."

"ஆமாம்மா... திலக் இது பத்தி பலமுறை என்கிட்ட பேசியிருக்கான்..." கோபி அம்மாவின் கைப்பற்றி அமர வைத்து விளக்கி சொல்ல ஆரம்பித்தான்.

ஒரு வழியாய் அவனுக்கென்றிருந்த பங்கில் ஒரு நிலத்தை விற்று பணத்துடன் சென்னை வந்து சேர்ந்தான் திலக்.

உதய்யை போனில் தொடர்பு கொண்டு விவரங்களைக் கூற, மகிழ்ந்த உதய் தானும் பணத்திற்கு ஏற்பாடு செய்து விட்டதைக் கூறினான். அவனை வீட்டிற்கு அழைத்தான். மறுநாள் வீட்டிற்கு வருவதாக வாக்களித்தான் திலக்.

ஹோட்டலில் தங்கியிருந்த திலக்... வந்த நிமிடத்திலிருந்து பிஸியாக இயங்கினான். திருப்பெரும்புதூரில் பார்த்திருந்த இடத்திற்கு பாதித் தொகையை கொடுத்தவன் இரண்டு நாளில் ரிஜிஸ்ட்ரேஷன் முடிந்ததும் மீதிப் பணத்தை தருவதாகக் கூறினான்.

ஏற்கனவே பார்த்து செலக்ட் பண்ணியிருந்த மிஷின்களுக்கு பணம் செலுத்தினான். ஒரு அமைச்சர் மூலம் அரசாங்க அனுமதியும் பெற்றிருந்தான்.

கிட்டத்தட்ட வந்த ஒரே நாளில் பாதி வேலைகளை முடித்தவன், களைப்புடன் கட்டிலில் வந்து விழுந்த போது செல்போன் அழைத்தது.

திரையில் எண்ணைப் பார்க்காமலே காதில் வைத்து "ஹலோ" என்றான்.

"ஆல் த பெஸ்ட் திலக் கண்ணா!" என்றாள் மதுரிமா.

"ஓ... நீயா... தாங்க்ஸ்!"

"என்ன... எனக்கு பயந்து ஓடிப் போய்ட்டியா?"

"முடியுமா? இங்கே வந்து தொல்லை கொடுக்காம விட்ருவியா என்ன?"

"தாங்க்ஸ்... என்னை புரிஞ்சுக்கிட்டதுக்கு. மறுபடி கேக்கறேன்... என்னை பிடிக்கலையா திலக்? ஏன் என்னை வெறுக்கறே? ஏன் என் மனசை புரிஞ்சுக்க மாட்டேங்கறே?"

"இதோ பார் மது! நீ அழகான பெண், புத்திசாலி, திறமையானவ... மறுக்கல. பட், உன் மேல எனக்கு வெறுப்புமில்லே... ஈர்ப்புமில்லே. அவ்வளவுதான் சொல்லுவேன்!"

"உன்னை என்கிட்டே கொண்டு வந்து சேர்க்க தடையா இருக்கறது எது? யாரையாவது காதலிச்சியா? அது தோல்வியில முடிஞ்சிடுச்சா?"

"இதுக்கு என்கிட்டே பதில் இல்லை..."

"நழுவப் பார்க்கறே?"

"உன் கேள்விக்கு ஆமாம்னும் சொல்ல மாட்டேன்... இல்லேன்னும் சொல்ல மாட்டேன். என்னை விட்ரு... அவ்வளவுதான்" என்றவன் போனை கட் பண்ணினான்.



"ஹலோ..."

"ஹாய்... உதய்... நான்தான்!"

"ஹாய் திலக்... உன் போனுக்காக தான் காத்திருந்தேன். எப்ப வீட்டுக்கு வர்றே?"

"மதியம்... மூணு மணி..."

"ஒக்கேடா... லஞ்ச் இங்கேதான்... ஒக்கே?"

"ஸாரி உதய்.. அஃபிஷியலா ஒருத்தரை சோழா ஹோட்டல்ல மீட் பண்றேன். லஞ்ச் அங்கேதான்."

"சரி... எங்கே போய்டப் போறே? என் வொய்ஃப் அருமையா சமைப்பா.. அடிக்கடி சாப்பிட தானே போகிறே?"

"கண்டிப்பா! தென்... நம்ம வொர்க்கை அடுத்த வாரத்திலேர்ந்து ஆரம்பிக்கறோம். ஆபீஸ், தொழிற்சாலைன்னு பக்காவா ரெடி பண்ணிட்டேன். திறமையான வேலையாட்கள் தேவை... ஸோ... நாளைக்கு ஹிண்டுலேயும், மத்த டெய்லி பேப்பர்லேயும் வான்டட்ல விளம்பரம் தரப் போறேன். நாம ரெண்டு பேரும்தான் இன்டர்வியூ பண்றோம்... ஒக்கே?"

"நீ பேசப் பேச... அந்தரத்துல பறக்குற மாதிரி இருக்குடா..."

"இப்பவே நிறைய ஆர்டர் பிடிச்சாச்சு. சப்ளை மட்டும்தான் பாக்கி."

"நீயே எல்லா வேலையும் செஞ்சா எப்படி?"

"நமக்குள்ளே என்ன பாகுபாடு? லாபமோ, நஷ்டமோ... எப்பவும் நாம பிரியக் கூடாது."

"தாங்க்ஸ்டா... திலக்!"

"சரி... இதை விடு. வீட்ல இந்த பிஸினஸுக்கு எல்லாரும் ஒத்துக்குட்டாங்களா?"

"தலையால தண்ணிக் குடிக்க வச்சுட்டாங்க. படாதபாடுபட்டு சம்மதிக்க வச்சேன்."

"நாம ஜெயிச்சு காட்டும்போது வாயடைச்சுப் போவாங்க. சரி... மீதி நேர்ல பேசுவோம்... பை!"

"பை... டா!"

"அம்மா... இவன்தான் திலக்..."

"வணக்கம்மா..."

"வணக்கம்ப்பா... உக்கார்!"

"அப்பா எங்கேம்மா?"

"வீட்டு வரி கட்டணும்னு போயிருக்கார்... காபி போட்டு கொண்டு வர்றேன்... பேசிட்டிரு!"

"பரவாயில்லே... வேண்டாம்மா!"

"முத முதல்ல வீட்டுக்கு வந்திருக்கே... எப்படி சாப்பிடாம போறதாம்? ஏந்தம்பி... பார்த்துக்கிட்டிருக்கிற வேலைய விட்டுட்டு, நிலத்தை வித்து இந்த தொழில்ல போடறான். சரியா வருமா?" கஸ்தூரியின் முகத்தில் பயம் மிகுந்திருந்தது.

திலக் ஒரு சின்ன சிரிப்புடன் உதய்யை பார்த்து விட்டு அவள் பக்கம் திரும்பினான்.

"உங்க பயம் நியாயமானது. பட், பயப்பட வேண்டிய அவசியமே இல்லேம்மா! அடுத்த வருஷம் அதே மாதிரி நிலம் உங்களுக்கு வாங்கித் தருவான். அதுக்கு நான் கியாரண்டி" என்றான்.

அவன் வார்த்தையில் கொஞ்சமாய் சமாதானமானவள்... காபி போட்டு கொடுத்தாள்.

இருவரும் அடுத்து செய்ய வேண்டிய வேலைகளை பேசினர்.

திடீரென நினைத்தவனாய், "உன் வொய்ஃப் இல்லையா?" என்று கேட்டான் திலக்.

"ஸாரிடா... சொல்ல மறந்துட்டேன். அவ அண்ணிக்கு உடம்பு சரியில்லேன்னு போன் வந்தது... காலையிலே கிளம்பிப் போய்ட்டா. வர்ற நேரம்தான். இரு... எங்க மேரேஜ் ஆல்பம் எடுத்துட்டு வர்றேன்..." என்றவன் சற்று நேரத்தில் ஆல்பத்தோடு வந்தான்.

அதை வாங்கி மடியில் வைத்த கணம், செல்போன் அலற... எடுத்து பேசியவன் எழுந்துக் கொண்டான்.

"ஸாரி உதய்... அவசரமா ஒரு பார்ட்டிய மீட் பண்ண வேண்டியிருக்கு. பெரிய ஆர்டர் கிடைக்க வாய்ப்பிருக்கு. நீயும் வாயேன்!"

"ஒக்கேடா... நான் ரெடி!"

ஆல்பத்தை டேபிளில் வைத்து விட்டு புறப்பட்டனர்.

## 11

"அடடா... அவர் வரும்போது நான் இல்லாமப் போய்ட்டேனே..." துணிகளை மடித்து வைத்துக் கொண்டே ஆதங்கப்பட்டாள் சஞ்சனா.

"பரவாயில்லை சஞ்சு... இனி அவன் இந்த ஊர்ல தானே இருக்கப் போறான்? அடிக்கடி பார்க்கப் போறே... சரி... அண்ணிக்கு எப்படி இருக்கு?"

"ஒண்ணும் பிரச்சினையில்லைங்க... டைம் கிடைக்கறப்ப... பைக்ல போய் கொஞ்சம் எட்டிப் பார்த்துட்டு வந்துடுங்க... அப்புறம்..."

"என்ன சொல்லு?"

"இது அவசியம்தானா?"

"எது?"

"உங்க ஃப்ரண்டோடச் சேர்ந்து தொழில்

பண்ணப் போறது?"

"நாளைக்கு நல்ல நேரம் பார்த்து ஆபீஸ் சேர்ல உட்காரப் போறேன். தேவையில்லாமப் பேசாதே சஞ்சனா."

"என் மனசுக்கு என்னவோ சரியா..."

"ப்ளீஸ்... எனக்கு எல்லாமே சக்ஸஸ் ஆகும்ன்ற நம்பிக்கை செண்ட் பர்ஸண்ட் இருக்கு. டிஸ்கரேஜ் பண்ற மாதிரி பேசறதை... இந்த செகண்டோட நிறுத்திக்க சஞ்சனா!"

அவனை மீறிய கோபம் குரலில் எட்டிப் பார்த்தது.

⁂

கம்பெனி திறப்பு விழாவை தடபுடலாகக் கொண்டாடினர். மத்திய அமைச்சர் திறந்து வைக்க... அரசியல் வி.ஐ.பி.க்களும், திலக்கின் அம்மாவும், அண்ணனும், உதய்யின் பெற்றோரும் கலந்துக் கொண்டனர்.

"என்ன உதய்... உன் வொய்ஃப் வரலே?"

"சொன்னேனே... கன்சீவா இருக்கா... டிராவலிங் கூடாது... அதான்!"

"ஓக்கே... ஓக்கே!"

அடுத்து வந்த நாட்கள் உதய்க்கு பெரும் நம்பிக்கையை தந்தது. திலக் நல்ல காண்டாக்ட் வைத்திருந்ததால்... உயர் அதிகாரிகளின் உதவியோடு நிறைய ஆர்டர்கள் பிடித்தான். இன்டர்வியூ மூலம் தேர்ந்தெடுத்த ஆட்களை ஆபீஸிற்கும், தொழிற்சாலைக்கும் அமர்த்தியிருந்தனர். உதய் ஆபீஸிலும், திலக் தொழிற்சாலையிலும் இருந்து வழிநடத்தினர்.

கனவுகள் கைசேர்ந்த களிப்பில் தீவிரமாய் உழைத்தனர்.

அன்று!

"என்ன உதய்... ஆபீஸ் ஓபனிங் செர்மனி ஆல்பத்தை வீட்டுக்கு கொண்டு போய் காட்டலியா?"

"வேண்டாம்டா..."

"ஏன்?"

"காரணமாகத்தான்! என் வொய்ஃப் உன்னைப் பார்க்கணும்... அவர் போட்டோ இருந்தா காட்டுங்கன்னு கேட்டுக்கிட்டே இருப்பா! ஒரு சர்ப்ரைஸா உன்னை அவ நேர்லயே பார்த்துக்கட்டுமே!"

"ஓ..." என்று வாய்விட்டு சிரித்தான்.

"சரி... ஹோட்டல்ல தங்கியிருக்கியே... சாப்பிட கொள்ள கஷ்டமாயில்லே?"

"வீடு பார்த்துட்டிருக்கேன்!"





"எங்க வீட்டு பக்கம் பார்க்கட்டுமா?"

"அது சரியா வராது. கம்பெனி பக்கமா இருந்தாதான் எனக்கு நல்லது!"

"அதுவும் சரிதான்! அம்மாவை உன்னோட வரவழைச்சு வச்சுக்கோயேன்!"

"ப்ச்... வரமாட்டாங்க!"

"அப்ப... வீட்டைப் பார்த்துக்க?"

"சமைக்க, துவைக்கன்னு... ஆளா கிடைக்காது சென்னையிலே?"

"அதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். என் வயசுதானேடா உனக்கும்? எனக்கும் இன்னொரு குழந்தை பிறக்கப் போகுது! நீ ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கலே?"

"விட்றா... வேற பேசுவோம்!"

"உன் க்ளோஸ் ஃப்ரண்ட் தானே நானும்? சொல்லு. உன் வாழ்க்கை மேல எனக்கும் அக்கறை இருக்கு தானே? சொல்லு... என்ன உன் பிரச்சினை? ஏன் கல்யாணம் பண்ணிக்காம இருக்கே? யாரையாவது லவ் பண்றியா?"



"நேரம் வர்றப்ப... கண்டிப்பா சொல்றேன். இப்ப என்னோட கான்ஸன்ட்ரேஷன் எல்லாமே தொழில்லதான்! அதுல பெரிய அளவுல ஜெயிக்கணும். கம்பெனிய விரிவுப்படுத்தணும். நூத்துக்கணக்குல ஆட்கள் வேலை செய்யணும். உனக்கு அட்மினிஸ்ட்ரேஷன் நல்லா வருது. நான் ஆர்டர் பிடிக்கறதை பார்த்துக்கறேன். உயரே... உயரே... உயரே போகணும் நாம!" திலக்கின் விழிகளில் வெளிச்சம் மின்னியது.

அது... உதய்யையும் பற்றிக் கொண்டது.

ஞாயிற்றுக் கிழமை!

வீட்டிற்கு சாப்பிட அழைத்திருந்தான் உதய். புதிதாய் வாங்கிய காரில் வந்திறங்கினான் திலக்.

சஞ்சனாவும், கஸ்தூரியும் சேர்ந்து விதவிதமாய் சமைத்தவைகளை... டைனிங் டேபிள் மீது அடுக்கி வைத்திருந்தனர்.

சஞ்சனா... மறுபடியும் ஒரு குளியல் போட சென்ற நேரம் பார்த்து திலக் வந்தான்.

"வா... வா... வாடா!"

"வாப்பா..."

"வாப்பா..."

உதய்யின் பெற்றோர் வரவேற்றனர்.

"வணக்கம்மா... வணக்கம்ப்பா!"

"நல்லாயிரு தம்பி!"

"உக்காருடா..."

"வாசனை தெருமுனை வரைக்கும் வருது. வீட்டு சாப்பாடு சாப்பிட்டு எத்தனை நாளாகுது? ஹாய் டியர்... உன் பேரென்ன?"

"பிரவீணா..."

"சமர்த்து... என்ன படிக்கிறே?" என்றபடி கேட்டு பிரவீணாவை தன் மடியில் அமர்த்திக் கொண்டான் திலக்.

உதய்யின் பெற்றோர் அவர்கள் பேச்சிற்கு இடைஞ்சலாக இருக்க விரும்பாமல் தங்கள் அறைக்குள் நாகரீகமாய் சென்று விட்டனர்.

சற்று நேர பேச்சிற்கு பின், "தண்ணி வேணும்" என்றான் திலக்.

"நான் ஒரு மடையன். வீட்டுக்கு வந்தவனுக்கு முதல்ல தண்ணி தரணும்னு கூடத் தெரியாம இருந்துட்டேன் பாரு!"

"அது தெரிஞ்ச விஷயம்தானே? போ... ஐஸ் வாட்டரா கொண்டு வா!" கிண்டலடித்தான்.

"நீ மாறவே இல்லேடா..." என்றபடி சமையலறை நோக்கி உதய் நகர...

குளித்து விட்டு ஹாலுக்கு வந்த சஞ்சனா... அமர்ந்திருந்த திலக்கை பார்த்தாள்.

பெரிய அதிர்ச்சி அலைகள் அவளை புரட்டிப் போட்டன.

திலக்கிற்கும் தான்!

ஓரிரு கணங்கள் தான்.

"தி...ல...க்?!"

"ச...ஞ்...ச...னா...?!"

சஞ்சனா மயங்கி... மடங்கி சரிந்தாள்.

"டா...டீ... அம்மா விழுந்துட்டாங்க!" பிரவீணா அலறியபடி அவளருகே ஓடி வர... தண்ணீர் பாட்டிலுடன் ஓடி வந்த உதய்... பதற்றத்தில் பாட்டிலை கீழே போட்டு விட்டு அவளை தூக்கி மடியில் கிடத்தினான்.

"சஞ்சு... சஞ்சு... இங்கே பார்... என்னாச்சு?"

திலக் சுதாரித்துக் கொண்டு பாட்டிலைத் திறந்து அவனிடம் நீட்ட, உதய் அதை வாங்கி முகத்தில் தெளித்து, புகட்டி விட்டான்.

சஞ்சனா இமைகளை பிரித்தாள்.

அதற்குள் அறைக்குள்ளிருந்து கஸ்தூரியும், அவள் கணவரும் வந்தனர்.

"பதறாதே உதய்... கர்ப்பமாயிருக்கிற பொண்ணுங்களுக்கு வர்ற சாதாரண மயக்கம் தான். இன்னைக்கு கொஞ்சம் எடுத்துப் போட்டு வேலை செஞ்சதுல களைப்பாயிட்டா. நீ அவளை படுக்க வை. நான் பரிமாறுறேன்!" என்றாள் கஸ்தூரி.

சஞ்சனாவை கைத்தாங்கலாக அழைத்துச் சென்று அறைக்குள் படுக்க வைத்து விட்டு வந்த உதய், "ஸாரி திலக்... பாவம் நீயும் டென்ஷனாயிட்டிருக்கே..."

"அ... அதெல்லாமில்லையே..." என்றவனின் இதயத் துடிப்பு அவனுக்கே நாராசமாய் கேட்க தான் செய்தது.

எப்படி சாப்பிட்டான், என்ன பேசினான், எப்போது கிளம்பி வந்தான் என்பது அவனுக்குத் தெரியவில்லை.

12

இரவு விளக்கொளியில் சுழலும் மின்விசிறி மினுக், மினுக் என அழகிய ஜாலம் புரிந்தது.

திலக்கின் விழியோரமும் கண்ணீர் திவலைகளால் மின்னியது.

'நீ எப்படி சஞ்சனா இப்படி? உதய்யின் கையால் தாலியை வாங்கிக் கொள்ள உடம்பு கூசவில்லையா? இன்னொருவனின் மனைவியாக பார்க்கவா இத்தனை நாளும் நான் மனதாலும் வேறு பெண்ணை தீண்டாமல் இருந்தேன்? உனக்கெப்படி இது சாத்தியம்? நான் உன் மீது வைத்திருந்த அத்தனை உயர்வான எண்ணங்களும் உன்னை பார்த்த நொடியில் அழிந்துப் போய் விட்டன சஞ்சனா! 'எனக்கு முன்னே நீ சாகணும்' என்று என்னை கொஞ்சியதற்கு இப்படியொரு அர்த்தமும் இருக்கிறதா பாவி? ச்சீ... உன்னையா இத்தனை வருடமும் என் மனதில் சுமந்தேன்?' வலக்கையால் நெஞ்சை அறைந்துக் கொண்டு கதறினான் திலக்.

'என் அருமையான நண்பன் உதய். அவனையுமல்லவா ஏமாற்றிக் கொண்டிருக்கிறாய்? உன்னை என்ன செய்தால் தகும்?' அவனுள் வெறுப்பு பாம்பு புற்றாய் வளரத் தொடங்கியது.

அவன் மனதில் ராணியாய் வீற்றிருந்த சஞ்சனாவின் வாயில் இரண்டு கோரை பற்கள் நீட்டிக் கொண்டிருந்தன.

சஞ்சனாவோ அவனை விட மோசமாய் துடித்துக் கொண்டிருந்தாள்.

'திலக்... திலக்... கடைசியில் நான் பயந்ததுப் போலவே... என் கணவர் சொன்ன திலக் நீங்களே தானா? நான் இக்கட்டான சமயத்தில் தேடிய போது கண்ணில் படாத நீங்கள் இப்போது மட்டும் எங்கிருந்து முளைத்தீர்கள்? என்னைப் பற்றி என்னை நினைத்திருப்பீர்கள்? நீங்கள் வராமலே இருந்திருக்கக் கூடாதா? நாம் ஏன் மறுபடி சந்தித்தோம்? உங்களைப் பற்றி என் கணவருக்கு தெரிந்தால்? ஐயோ...!'

சஞ்சனாவின் உறக்கம் முற்றிலும் தொலைந்தது. மரண அவஸ்தையில் அவள் கவனம் எதிலும் பதியாமல் அவளுக்குள் காணாமல் போனாள். ஒரு கைப்பிடி உணவுக் கூட தொண்டைக்குள் இறங்க மறுக்க... விளைவு சுமந்திருந்த கருவிற்கு பிரச்சினையானது.

மறுபடி மயக்கமுற்று விழுந்திருந்தவளை மாமியார்தான் கவனித்து... பயந்து மருத்துவமனையில் சேர்த்தாள். கரு கலையும் நிலையில் இருந்தது.

திலக்குடன் தொழிற்சாலையில், பரிசோதனையில் இருந்தபோது உதய்க்கு போனில் தகவல் வந்தது.

நடுங்கிப் போனவன் நண்பனிடம் சொல்லி விட்டு அவசரமாய் கிளம்பிப் போனான்.

திலக் சிரிப்பை உள்ளுக்குள் மென்றான்.

'சஞ்சனா... உனக்கு தண்டனையை நான் தர தேவையில்லை. நீயே கொடுத்துக் கொள்வாய். இது ஆரம்பம்தான்!' கறுவிக் கொண்டான்.

டாக்டரின் முன் அமர்ந்திருந்தான் உதய். அவன் முகத்தில் கலவரம் மண்டிவிட்டு அமர்ந்திருந்தது.

"மிஸ்டர் உதய்... நான் உங்ககிட்டே ஸ்ட்ராங்கா சொல்லியிருந்தேனே... அவங்க ரொம்ப வீக்கா இருக்காங்க... கேர்ஃபுல்லா பார்த்துக்கணும்னு... ஹைபிரஷர்ல கர்ப்பம் கலையற சிச்சுவேஷன்."

"ஐயோ..."

"இஞ்ஜெக்ஷன் போட்டிருக்கேன். இப்ப பிளீடிங் இல்லை. என்னாச்சு... வீட்ல ப்ராப்ளமா?"

"இல்லையே டாக்டர். நீங்க சொல்றபடி தான் அவளை கவனிச்சுக்கறேன். போன வாரம் கூட மயங்கி விழுந்துட்டா."

"மயக்கம் வர்றது இப்ப நார்மலான விஷயம் தான். எனிவே... ரெண்டு நாள் ஹாஸ்பிடல்லேயே இருக்கட்டும். அவங்க மனசு கோணாதபடி பார்த்துக்குங்க."

"ஒக்கே டாக்டர்... தாங்க்யூ!"

உதய் அதிகாலையில் எழுந்து... தன்னால் முடிந்தவரை எல்லா வேலைகளையும் செய்தான். பம்ப்பில் தண்ணீர் அடித்து குடம், பக்கெட்டுகளை நிரப்பி வைத்தான். பிரவீணாவை ரெடிப் பண்ணி பள்ளிக்கு அனுப்பினான். அம்மாவுக்கு சமையலில் உதவி செய்து விட்டு திருப்பெரும்புதூர் ஓடினான். தொழிலில் அவர்கள் எதிர்பார்த்ததைவிட ஏற்றம் அதிகமானது.

திலக் மனதளவில் அடிபட்டிருந்தாலும் தொழிலில் அதை காண்பிக்கவில்லை. பம்பரமாய் சுழன்று ஆர்டர்களை பிடித்து, தயாரித்து சப்ளை செய்தான். உதய், அவன் கழுத்தை பிடித்து "போதும் போடா... நாளைக்கு வா..." என்று சொல்லும் வரை வேலை செய்தான்.

சஞ்சனாவிற்கு தினமும் பழங்கள் வாங்கிச் செல்வான் உதய். பாதாம், பிஸ்தாக்களை சிறுதுண்டுகளாக நறுக்கி பாலில் போட்டு காய்ச்சி அவளுக்கு புகட்டினான்.

சிறு குழந்தையைப் போல் பார்த்துப் பார்த்து செய்த கணவனை ஏறிட்டுப் பார்க்கவே கூசியது சஞ்சனாவிற்கு.

'நான் உங்களுக்கு துரோகம் பண்ணி விட்டேன். அது தெரிஞ்சா... எப்படி துடிச்சுப் போவீங்க...' என்பதை நினைத்து... நினைத்து தான் துடித்துப் போனாள்.

"**சொ**ன்னாக் கேளு உதய்... இந்த சன்டே எனக்கு வேற வேலை இருக்கு"

"எந்தக் காரணமும் எனக்கு தேவையில்லை. சன்டே லஞ்ச் எங்க வீட்லதான்! அன்னைக்கு நடந்த களேபரத்துல என் வொய்ஃப் கிட்டே உன்னை அறிமுகப்படுத்த முடியாமலே போச்சு. உன்னை அவ பார்த்தாளா, பார்க்கலியான்னு கூட தெரியலே. அதனால கண்டிப்பா வர்றே... ஒக்கே!"

"புரிஞ்சுக்கடா ப்ளீஸ்..."

"நோ... நோ... நோ! நான் சஞ்சனா கிட்டேயும் சொல்லியாச்சு. நீ வர்றே... அவ்ளோதான்!" என்று கறாராக பேசி முடித்தான் உதய்.

திலக் சங்கடமாய் உணர்ந்தாலும்... அவளை எந்தவிதத்திலாவது மனவேதனையை உண்டுப் பண்ண முடியாதா என்று யோசித்தான்.

"ம்...சரி..." என்றான்.

உதய் அவன் தோளில் வேகமாய் தட்டி தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான்.

வாசலில் கார் வந்து நின்ற சப்தத்தை கேட்டதும் தன்னை மிக சிரமப்பட்டு இயல்பாய் இருக்க முயன்றாள் சஞ்சனா.

"வாடா... சஞ்சனா.. இங்கே வா!"

".....?!"

"இதுதான் என் வொய்ஃப் சஞ்சனா! சஞ்சு... இது திலக்!"

"வ... வணக்கம்!"

"வணக்கம்!" திலக்கின் குரல் அமர்த்தலாய் வெளிப்பட்டது.

"அன்னைக்கு வந்திருந்தப்ப... நீ மயங்கி விழுந்துட்டே! சரியாக் கூட சாப்பிடாம கிளம்பிட்டான். இன்னைக்கு அவன் எதையும் மிச்சம் வைக்கக் கூடாது... சரியா?"

".......?!"

"அம்மா... அப்பா எங்கேடா?"

"சொந்தக்காரங்க வீட்ல விசேஷம். பிரவீணாவையும் அழைச்சிட்டுப் போயிருக்காங்க... அட... என்ன சஞ்சு... உன் கை ஏன் இப்படி நடுங்குது? குழம்பு அவன் மேல பட்டுடப் போகுது."

"பாவம்... டென்ஷனாயிருக்காங்க போலயிருக்கு. நாமளே பரிமாறிக்கலாமே... நீங்க உக்காருங்க..."

"ஆமாம்... நீ உக்காரு சஞ்சு... நாங்களே எடுத்துப் போட்டுக்கறோம்."

"அவங்களும் சாப்பிடட்டுமே!"

## எண்களில் 9–க்கு மட்டும் தனி சிறப்பு!

9 எண்ணுக்கு மட்டும் எப்போதுமே ஒரு சிறப்பு உண்டு. உலக வெப்பமயமாவதை தடுக்க விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த 9-9-09 அன்று 9 நிமிடம் உலகம் முழுவதும் மின் விளக்குகளை அணைக்கும் நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதிகாச சரித்திர காலத்திலும் கூட்டு எண்ணிக்கை 9-க்கு ஒரு சிறப்பு இருந்தது. தேவ அசுர யுத்தங்கள் நடந்த ஆண்டுகள் 18- 1+8=9. ராம - ராவண யுத்தம் 18 மாதம் = 9. மகாபாரதப் போர் நடந்த காலம் 18 நாட்கள் = 9. பகவத் கீதையின் அத்தியாயங்கள் 18 = 9.

கிருத யுகத்தின் ஆண்டுகள் 17,28,000=9.

திரேதா யுகத்தின் ஆண்டுகள் 12,96,000=9.

துவாபர யுகத்தின் ஆண்டுகள் 8,64,000=9.

கலியுகத்தின் ஆண்டுகள் 4,32,000=9.

நான்கு யுகங்களின் மொத்த ஆண்டுகள் 43,20,000=9.

நல்ல அரசனின் குணங்கள் 36=9.

சித்தர்கள் 18=9.

ஆடிப்பெருக்கு 18=9.

விதை விடும் சுபநாள் 9.

கஜினி முகம்மது இந்தியா மீது போர் தொடுத்து தோற்றது 18 (முறை) =9.

"ம்ஹூம்... அந்நிய ஆம்பளைங்க முன்னாடி உக்காரவே மாட்டா... சாப்பிடறதாவது?"

"நான் என்ன அவங்களுக்கு அந்நியனா?"

".......?!"


"நீதான் என்னைப் பத்தி முன்னாடியே நிறைய சொல்லி இருக்கேன்னு சொன்னியே..." சமாளித்தான் திலக்.

"சரி.... இதைவிடு... இன்னும் எத்தனை காலத்துக்கு ஹோட்டல் சாப்பாடே சாப்பிட்டு உடம்பை கெடுத்துக்கப் போறே? கல்யாணம் பண்ணிக்கிட்டு வீட்டுக்காரம்மா சாப்பாடை சாப்பிடலாமே!"

"சாப்பாடு சூப்பராயிருக்கு... சாப்பிடவா,



இப்படி 9 எண்ணுக்கு பல சிறப்பு இருக்கிறது என்பதை உணரும்போது பிரமிப்பாக இருக்கிறதா! இன்னும் இருக்கிறது. சொல்வதற்குதான் இடம் போதாது.




வேணாமா?"

"இப்படியே வாயை அடைச்சிடு"

அவன் சாப்பிட்டு முடித்தபின் கொண்டு வந்திருந்த பாலிதீன் கவரை எடுத்து சஞ்சனாவிடம் நீட்டினான்.

"ஸாரிங்க... வந்ததும் கொடுக்க நினைச்சேன்... ஏதோ ஞாபகத்துல மறந்துட்டேன்" அவளையே குறுகுறுவென பார்த்தான் திலக்.

"எ... என்னது?"

"ஸ்வீட், பிஸ்கட்ஸ்..."

"வாங்கிக்க சஞ்சு!"

வாங்கிக் கொண்டாள் கை நடுங்க.

"நான் வர்றேன்... வர்றேங்க..."

"ம்..."

"இருடா... நானும் வர்றேன்."

இருவரும் வெளியேற... கவரை பிரித்துப் பார்த்தாள்.

அவளுக்குப் பிடித்த கல்கத்தா ரசகுல்லா!

சஞ்சனாவின் கண்களில் சட்டென துளிர்த்தது.

காதலிக்கும் போது திலக்... அவளுக்கென தேடித்தேடி வாங்கித் தந்த ஸ்வீட்!

இப்போது ஒவ்வொன்றும் வெடிகுண்டுகளாய்...

**13**

**செ**ன்னை வந்து தொழில் தொடங்கி ஐந்து மாதம் ஓடோடி விட்டது. அவன் எதிர்பார்த்ததையும் விட தொழிலில் வளர்ச்சி அமோகமாய் இருந்தது... இரட்டிப்பு சந்தோஷத்தை தந்திருக்க வேண்டும். ஆனால், திலக்கின் மனசு வெறுமையாய் இருந்தது. அர்த்தமற்ற நிமிடங்களை கரைத்து குடித்து நாட்களை ஒப்பேற்றிக் கொண்டிருப்பதாகவே தோன்றியது.

சஞ்சனாவை தன் இறுதி நாட்கள் வரை பார்க்காமலே இருந்துவிட்டிருந்தால் நன்றாயிருந்திருக்குமே என எண்ணினான்.

ஹோட்டல் வாசம், ஜீரணமாகாத சாப்பாடு, சஞ்சனாவின் துரோகம், அம்மாவின் கோபம், மதுரிமாவின் பிடிவாதம் என... அவனைச் சுற்றி எதுவுமே ரம்மியமாய் இல்லை.

இன்று ஒரு பெரும்புள்ளியை சந்திக்க வேண்டும். அவர் சிபாரிசின் மூலம் வெளிநாட்டிலிருந்து சில மூலப்பொருட்கள் தருவிக்கப்படுகின்றன. அதன் நிமித்தம் சந்திப்பு பத்து மணிக்கு அப்பாய்ண்ட்மெண்ட்!

குளித்து முடித்து, அறைப் பையன் அயர்ன் பண்ணி வாங்கி வந்திருந்த சட்டை பேண்ட்டை அணிந்துக் கொண்டு, தலை வாரும் போது... அழைப்பு மணி ஒலித்தது.

கதவைத் திறந்தவன் சில கணங்கள் விழிகளை மூடவில்லை.

"வா... மது... அப்படின்னு கூப்பிடலாமே திலக்!"

"எ... என்ன திடீர்னு இங்கே? உனக்கெப்படி இந்த...?"

"பெரிய விஷயமா? அத்தைக்கு போன் போட்டா... அட்ரஸ் குடுத்துட

மாட்டாங்களா? ஃப்ளைட் பிடிச்சு வந்துட்டேன்!"

"சரி... அப்படி என்ன அவசரம்?"

"காபி ஆர் டீ ஆர்டர் பண்ணலாமே? அதுக்குள்ளே ஒரு குளியல் போட்டுக்கறேன்... இதானே பாத்ரும்?"

"ஏய்... ஏய்... ச்சை!" மூடப்பட்ட கதவின் முன் காலை உதைத்து கோபத்தை வெளிப்படுத்தினான்.

'சனியன்... கிளம்பற நேரத்துல வந்து உயிரை வாங்கணுமா?'

பத்தே நிமிடத்தில் குளித்து உடைமாற்றி அப்போதுதான் செடியிலிருந்து பறித்த ரோஜாவைப் போல் எதிரில் வந்து நின்றாள் மதுரிமா.

"பரவாயில்லையே... உடனே ஆர்டர் பண்ணி வரவழைச்சிட்டியே... தாங்க்ஸ் ஃபார் யுவர் காபி" எடுத்து உறிஞ்சினாள்.

"நான் வெளியே கிளம்பணும்..."

"கிளம்பிட்டாப் போச்சு. அதுக்கு முன்னாடி... டிபன் சொல்லிடேன்... சாப்பிடலாம்!"

பொங்கி வந்த கோபத்தை... அவள் முகம் பார்த்து அடக்கிக் கொண்டான். பரிதாபமாய் இருந்தது.

'விடாமல் போராடி என்ன சாதிக்கப் போகிறாள்?'

"இங்கெல்லாம் தங்க முடியாது... என்னைப் பத்தி என்ன நினைப்பாங்க?"

"தோ... பாரேன்! அப்படியொரு ஆசை இருக்கா உனக்கு? சான்ஸே இல்லை... அதெல்லாம் கல்யாணத்துக்கு பிறகுதான்.... நான் வந்த வேலை முடிஞ்சதும் கிளம்பிடுவேன். நீ எப்ப கிளம்பணும்?" என்றாள் குறும்பு கொப்புளிக்க.

"ஒன்பது மணிக்கு!" என்றான் அடர்வான குரலில்.

"நானும்!"

"இதோ பார்... நீ ஏன் வந்தே, எதுக்கு வந்தேன்னு தெரியாது. பட், உன் எண்ணத்தை மாத்திக்க! உன் வயசு பொண்ணுங்களுக்கெல்லாம் கல்யாணமாகி குழந்தை, குட்டிகள்னு செட்டில் ஆய்ட்டாங்கன்னு உன் பேரண்ட்ஸ் வருத்தப்படறாங்க. புரிஞ்சுக்க மாட்டியா?"

"இதை நீ என்கிட்ட சொல்றியா? நீதான் புரிஞ்சுக்கணும். நீ மனசு வச்சாதானே... குழந்தை குட்டிகள்னு செட்டிலாக முடியும்?"

"ச்சீ... பொண்ணா நீ? வெக்கமில்லாம பேசறே?"

"உன்கிட்ட எனக்கென்ன வெக்கம்?" சரிந்து விழுந்த துப்பட்டாவை சரிப் பண்ணியவள், இன்டர்காம் எடுத்து "ரிசப்ஷனுக்கு என்ன நம்பர்? எனக்கு ரெண்டு இட்லி, பூரிமசாலா... உனக்கு?"

"விஷம்... குடு இப்படி!" ரிசீவரை பிடுங்கி ஆர்டர் செய்தான்.

"இந்த க்ரீம் கலர் ஷர்ட்டும், பிளாக் கலர் பேண்ட்டும் உனக்கு அட்டகாசமா இருக்கு திலக்!"

"......?!"

"இந்த பிஸ்தா கலர் சல்வார் எனக்கு ரொம்ப அழகாயிருக்குன்னு உன் மனசு சொல்றது எனக்குத் தெரியும். வாய்விட்டு சொல்லலேன்னா... வருத்தப்பட மாட்டேன்!"

"லூஸு மாதிரி பேசாதே!"

"சரி... என்னாச்சு உன் லவ்?"

"என்ன லவ்?" என்றான் முகம் சுருக்கி.

"இவ்வளவு அழகான மதுரிமா உன் மனசுக்குள்ள வரமுடியாம ஆல்ரெடி வந்து உட்கார்ந்திருக்கிற அந்த எக்ஸ் பொண்ணு யாரு?"

"மறுபடி உளறாதே..."

"கல்யாணமே வேணாம்னு பிள்ளையார் மாதிரி வருஷக்கணக்குல இழுத்தடிச்சிட்டிருக்கியே அதுக்கு பேர் என்னவாம்? நீ யாரையோ லவ் பண்ணியிருக்கே. அதனாலதான் என்னை ஏத்துக்க முடியாம தவிக்கிறே! நானும் உன்னை லவ் பண்றேனே திலக்? என்னால மட்டும் எப்படி வேற ஒருத்தனை கல்யாணம் பண்ணிக்க முடியும்? உன் லவ் ஃபெய்லியரானா, என் லவ்வும் ஃபெய்லியர் ஆகணுமா?"

".....?!"

"நீயும் எத்தனை நாள் இப்படியே இருந்துடுவேன்னு நானும் பார்க்கறேன்! இளமை திமிரோ, வேற திமிரோ எனக்கு கிடையாது. என் இளமையெல்லாம் கரைஞ்சு காணாமப் போனாலும் பரவாயில்லே... உன் மனசு மாறுறவரைக்கும் நான் காத்திருப்பேன். ஏன்னா... உன்னை அந்தளவு பிடிக்கும் திலக். உனக்கு என் மேல காதல் வரலேன்னாலும், வயசான காலத்துல சாஞ்சுக்க ஒரு தோள் வேணும்னு மனசு நட்புக்கு ஏங்குமே... அந்த நட்புக்காகவாவது கண்டிப்பா நீ என்னைத் தேடி வருவே! அப்ப நான் இன்னொருத்தர் வொய்ஃபா இருந்தா... எப்படி என் மேல



சாஞ்சுக்க முடியுமாம்?" தீவிரமாய் பேசியவள், அவளுக்கே உரிய குறும்புத்தனத்துடன் முடித்தாள்.

அவளின் வார்த்தைகள் திலக்கை ஸ்தம்பிக்க வைத்தன என்றே சொல்ல வேண்டும்.

அவன் அடுத்த வார்த்தை பேசுமுன் அறைப்பையன் கதவை தட்டிவிட்டு டிபன் அயிட்டங்களை கொண்டு வந்தான்.

மௌனமாய் சாப்பிட்டான்.

"பிஸினஸ் நல்லா போய்ட்டிருக்குன்னு கோபி மாமா சொன்னார். சந்தோஷமாயிருந்துச்சு. ஒரு வேளை நீ மனசு மாறினால்... அந்த வேலையை விட்டுட்டு நான் இங்கேயே கூட வந்துடுவேன் திலக்!"

"பேசாம சாப்பிடு... எனக்கு நேரமாச்சு..."

சாப்பிட்டு முடித்தனர்.

"கிளம்பலாமா?"

"வந்த வேலை முடியலியே... அஞ்சே நிமிஷம்... லீவே கிடைக்கலே... கெஞ்சிக் கேட்டு அரை நாள் லீவு எடுத்தேன். அடுத்த ஃப்ளைட் பிடிச்சு... ஆபீஸ் போகணும்!"

"அப்படி வந்தே ஆகணும்னு என்ன கட்டாயம்?"

"இருக்கே...?!" என்றவள் தனியே இருந்த பாலிதீன் கவரைத் திறந்து ஒரு ஸ்வீட் பாக்ஸை எடுத்தாள்.

அதில் நெய்யொழுக...மைசூர்பாகு!

"என்ன விசேஷம், பிரமோஷன் கிடைச்சிருக்கா?"

"ம்ஹூம்..."

"பின்னே?"

"இன்னைக்கு என்னோட பர்த்டே!"

"பர்த்டேவா?" அதிர்ந்தான்.

"ஆமாம் திலக். என் பர்த்டே அதுவுமா உன்னைப் பார்க்கணும், உன் கையால ஸ்வீட் வாங்கிக்கணும்னு ஆசைப்பட்டேன். அப்பதான் ஒவ்வொரு பர்த்டே அன்னைக்கும் உன்னோட இருப்பேன்ங்கற சென்டிமென்ட்! அதுக்காகதான்... பறந்து வந்தேன். இந்தா... இதை, விஷ் பண்ணி ஒரு பீஸை எனக்குத் தா!"

ஆசையும், காதலுமாய் அவள் நீட்டியபோது... மனசு அந்த மைசூர்பாகைப் போல் பரிதாபத்தில் கரைந்ததென்னவோ... நிஜம்.

***

ஏழு மாத வயிறு மேடிட்டிருந்தது!

மனசு முழுக்க சஞ்சலத்தையும், வயிற்றில் குழந்தையையும் சுமந்திருப்பது பெரிய அவஸ்தையாக இருந்தது சஞ்சனாவிற்கு.

திலக்கின் பார்வையும், அது சொல்லும் அர்த்தத்தையும் தாங்கிக் கொள்ள முடியவில்லை. எந்நேரமும் அவன் அவளைப் பற்றி கணவரிடம் சொல்லி விடலாம். அதன் பிறகு என்ன நடக்கும்?

நினைக்கும் போதே... உடம்பிலுள்ள பாகங்கள் எல்லாம் உதிர்வதுப் போன்றதொரு உணர்வு!

கோவிலை நோக்கி நடந்துக் கொண்டிருந்தாள்.

அப்போதுதான்... அந்த டாடா சியரா அவளைக் கடந்து சென்றது.

'அது... அது திலக்கின் கார் அல்லவா? இங்கு எப்படி... வீட்டிற்கு வந்துச் செல்கிறானா?'

யோசித்தவள்... அடுத்த நிமிடம் நின்றிருந்த ஒரு ஆட்டோவில் ஏறி, "அதோ அந்த காரை ஃபாலோ பண்ணுங்க... சீக்கிரம்" என்றாள்.

## 14

கார் முன் பிரேக்கிட்டு வழிமறித்த ஆட்டோவைப் பார்த்து பதறி ஆத்திரத்துடன் இறங்கினான் திலக்.

ஆட்டோவிற்கு பணம் கொடுத்து அனுப்பிவிட்டு திரும்பிய சஞ்சனாவைப் பார்த்து அதிர்ந்தான்.

அவன் வாயை திறக்குமுன், சட்டென கை கூப்பிய சஞ்சனா, "என்னை மன்னிச்சிடுங்க திலக்!" என்றாள்.

"ச்சீ... உன்னையா?" வெறுப்பை உமிழ்ந்தான்.

"ஐயோ .. அவசரப்பட்டு தப்பா முடிவுப் பண்ணாதிங்க!"

"தப்பான வாழ்க்கை வாழ்ந்திட்டிருக்கிற உன்னை என்னன்னு நினைக்கிறது? ம்...? கழுத்துல ஒருத்தனையும், மனசுல ஒருத்தனையும் சுமக்கிறவளைக் கூட மன்னிச்சிடலாம்... ஆனா, உன்னை..." என்று முகத்தைத் திருப்ப...

சரக்கென்று பைக் வந்து நின்றது.

வந்ததோ உதய்!

இருவருமே திடுக்கிட்டனர்.

"என்ன ஆச்சர்யம் இது? சஞ்சனா உண்மையிலேயே இது நீதானா?" என்று சிரித்தான்.

திலக் புரியாமல் பார்க்க,

சஞ்சனா, "இல்லீங்க... நடு வழியில் இவரைப் பார்த்தேன். நலம் விசாரிச்சேன்..." என்று பயத்துடன் கூற...

"பரவாயில்லையே... தேறிட்டே! என்ன படிச்சென்ன திலக்? மத்த ஆண்கள்கிட்ட நாகரீகமா நாலு வார்த்தை பேசிப் பழக மாட்டேங்கிறாளேன்னு குறைப்படுவேன். இப்ப ஒக்கே!" எனக் கூற, திலக் அவளை ஏளனமாய் பார்த்தான்.

"நீ வீட்டுக்கு வந்துட்டு போனதும், நானும் பின்னாடியே கிளம்பிட்டேன். நடு வழியில் உன் காரை பார்த்துதான் நிறுத்தினேன். சரி திலக், நீ பேசிக்கிட்டிரு... நீ குடுத்த செக்கை அந்த பார்ட்டிகிட்டே கொடுத்துட்டு நேரே ஆபீஸ் வந்திடறேன்."

"நானும் கிளம்பறேன் உதய்... வர்றேங்க!"

"சஞ்சனா பார்த்துப் போ... வரட்டுமா?"

"அவசியம் போகணுமாங்க?"

"கண்டிப்பா போகணும்! திலக் ஒரு ஃப்ரண்ட்லி டின்னருக்கு ஏற்பாடு பண்ணியிருக்கான். அதுவும் நம்ம ரெண்டு பேருக்கு மட்டும். நீயும் வீடே கதின்னு அடைஞ்சு கிடக்கறியே.. ஒரு சேஞ்சா இருக்கும்... கிளம்பு!"

வற்புறுத்தி அழைத்துச் சென்றான் உதய்.

இதயத்திற்குள் புழு நுழைந்த அவஸ்தையுடன் சஞ்சனா.

ஹோட்டலின் ரூஃப் கார்டனில் டின்னருக்கு ஏற்பாடு செய்திருந்தான் திலக்.

'டின்னருக்கு என்ன அவசியம் வந்தது?' சஞ்சனாவை அந்தக் கேள்வி குடைந்துக் கொண்டே இருந்தது.

ஏகப்பட்ட ஐட்டங்கள். திலக்கே பரிமாறினான்.

அமைதியாக சாப்பிட்டாள். பிஸினஸ் உட்பட பலதையும் பேசினர் மற்ற இருவரும்.

அப்போதுதான் அந்த கேள்வியைக் கேட்டான் உதய்.

"இன்னைக்கு உன்னை விடற மாதிரி இல்லை. நீ சொல்லிதான் ஆகணும். எப்ப கல்யாண சாப்பாடு போடப் போகிறே?"

"ப்ச்..."

"நான் கேட்டா பதில் சொல்ல மாட்டே! சஞ்சனா மேலே உனக்கு மரியாதை இருக்குதானே? சஞ்சு நீ கேளு... எப்ப கல்யாணம் பண்ணிக்கப் போறீங்கன்னு?"

"நா... நானா?"

"ஏன் அவங்களை சங்கடப் படுத்தறே? இப்ப என்ன உன் கேள்விக்கு பதில் சொல்லணும் அவ்வளவுதானே?"

"யெஸ்!"

சஞ்சனா விக்கித்துப் போய் திலக்கை ஏறிட்டாள்.

'சொல்லி விடுவானோ?'

"கல்யாண சாப்பாடுதானே? ஸாரிப்பா... மறுபடி போட முடியாது."

"எ... என்னடா சொல்றே?"

"எனக்கு கல்யாணமாய்டுச்சு!"

".........?!"

".........?!"

"எ... எப்ப?"

"எம்.எஸ்சி. படிக்கிறப்ப... ஒரு பொண்ணை லவ் பண்ணி... ரிஜிஸ்டர் மேரேஜூம் பண்ணிக்கிட்டோம். பட், ரெண்டுபேர் வீட்டுக்கும் தெரியாது... இன்னைக்கு வரைக்கும்! ஆனா, படிப்பை முடிச்சிட்டு போனவ... போனவதான்..."

"அப்புறம்?"



"ஏழு வருஷத்துக்கப்புறம் பார்த்தேன்... இன்னொருத்தன் பொண்டாட்டியா...!" சொல்லும்போதே திலக்கின் கன்னத் தசைகள் துடித்தன.

"மை காட்! அப்புறம்?" துடித்துப் போனான் உதய்.

"ப்ளீஸ்டா... இதுக்கப்புறம் எதுவும் கேக்காதே... நான்... செத்துக்கிட்டிருக்கேன். ப்ளீஸ்... இனி இந்த மாதிரி கேள்வி கேட்கக் கூடாதுன்னு தான் இதையேக் கூட சொன்னேன். புரிஞ்சுக்கடா... சாப்பிடு... நீங்க என்னங்க... ஷாக்காயிட்டீங்களா? வேர்த்துக் கொட்டியிருக்கு... காத்து வரலையா?" என்றான் சஞ்சனாவைப் பார்த்து.

மயக்கம் வரும் போலிருந்தது அவளுக்கு. கண்ணாடித் தம்ளரில் இருந்த தண்ணீரை ஒரே மடக்கில் குடித்து ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்.

பைக் சாவியை எடுத்துக் கொண்டு கிளம்பிய கணவனை வியப்பாய் பார்த்தாள்.

"என்னங்க டிபன் சாப்பிடாம கிளம்பறீங்க? எல்லாம் ரெடியா இருக்குங்க" என்றாள் சஞ்சனா.

"வேணாம் சஞ்சு... மனசு சரியில்லே... டிபன் வேணாம்."

"என்னாச்சுங்க?"

"திலக் சொன்ன விஷயத்தை கேட்ட பிறகு... ரொம்ப கஷ்டமாயிடுச்சு! நீ கூட அதை நினைச்சு நைட்டெல்லாம் தூக்கம் வராம புரண்டுக்கிட்டிருந்தே! உனக்கே அப்படின்னா... அவன் எனக்கு க்ளோஸ் ஃப்ரண்ட்! எனக்கு எப்படியிருக்கும்? எப்படி சஞ்சனா... பொண்ணுங்க இப்படியெல்லாமா ஏமாத்துவாங்க? அவனையும் கல்யாணம் பண்ணிக்கிட்டு... அவனுக்குத் தெரியாம இன்னொருத்தனையும் கல்யாணம் பண்ணிக்கிட்டு... சே... உடம்பு கூசாதா அவளுக்கு? பேசாம விபசாரம் பண்ணலாமே!"

".........?!"

"ஏய்...சஞ்சு...நீ ஏன் அழறே?"

"ஆமாங்க...பேசாம அவ செத்துப் போயிருக்கலாம்."

"ஐயோ கடவுளே... எந்த சனியனோ செய்த தப்புக்கு நீ ஏன் அழணும்? சரி... இதைப்பத்தி பேச வேணாம். நீ சாப்பிட்டு மாத்திரை போட்டுட்டு ரெஸ்ட் எடு! ம்... வர்றேன்!" இதமாய் அவள் கன்னத்தை தடவிக் கொடுத்து விட்டு சென்றான்.

உடல் முழுக்க புழுக்களை கொட்டிய அவஸ்தையில் குறுகிப் போயிருந்தாள் சஞ்சனா.

பெயருக்கு சாப்பிட்டு, கடமைக்கு மாத்திரை போட்டுக் கொண்டு படுத்தவள் முன்... அவளை குற்றவாளியாக்கி வெறுப்புடன் பார்த்த திலக் நின்றான். கண்களை மூடினாள். நிறைந்து வெளியேறின உப்புநீர்!

மூடிய கண்களுக்குள் காதலைத் தேக்கி வைத்த விழிகளுடன் திலக் தெரிந்தான்... ஏழு வருடத்து முந்திய திலக்...!

சஞ்சனாவின் சொந்த ஊர் மாயவரம். படிப்பதற்காக திருச்சி வந்து, ஹாஸ்டலில் தங்கி படித்தாள். அவளுடன் அவள் வகுப்புத் தோழிகள் அபிநயா, கலைச்செல்வி, ரீட்டா, ரோஸ்லின், விமலா, ஆபிதா, மகேஸ்வரியும் ஒரே அறையில் தங்கியிருந்தனர். ஒரே கல்லூரி, ஒரே வகுப்புத் தோழி என்றாலும், அதே ஹாஸ்டலில் வேறு அறையில் தங்கியிருந்தாள் தேவி.

## புண்ணியம் தரும் பாவை விளக்கு

வீடுகளில் குத்து விளக்கு, அகல்விளக்கு, காமாட்சி விளக்குகளில் தீபம் ஏற்றுகிறோம்.

ஆனால் கோவில்களில் அகல்விளக்கில் தீபம் ஏற்றுவதை விட பாவை விளக்குகளில் தீபம் ஏற்றுவது பெரும் புண்ணியம் என புராணங்கள் கூறுகின்றன.

சில முக்கியமான கோவில்களில் மட்டுமே பாவை விளக்கு காணப்படும். நல்லூர் கோவில், திருவிடைமருதூர் கோவில் ஆகியவற்றில் பாவை விளக்குகள் காணப் படுகின்றன. இதில் எண்ணெய் ஊற்றி விளக்கு ஏற்றுவது பெரும் புண்ணியம் அளிக்கும்.

பாரம்பரிய முறைப்படி அழகிய பெரிய பாவை விளக்குகளை வார்த்து தயாரிப்பதில் நாச்சியார்கோவில் மற்றும் சுவாமிமலை சிற்பிகள் புகழ்பெற்றவர்கள் ஆவர்.

- வீ.பி.கே.மூர்த்தி, பாபநாசம்.

அதே ஊரில் வேறொரு கல்லூரி ஹாஸ்டலில் தங்கி எம்.எஸ்சி. படித்து வந்த திலக், மதுரையில் பி.எஸ்சி. படித்தவன். சொந்த ஊர் தாராபுரம்.

ஒரு புத்தகக் கடையில்தான் இருவரும் முதன் முதலில் சந்தித்துக் கொண்டனர். நாளடைவில் காதலாக மாறியது. அது அவள் அறைத் தோழிகளுக்கும், அவனின் அறைத் தோழர்களுக்கும் மட்டுமே தெரிந்த ரகசிய காதல்.

அவன் லேடீஸ் ஹாஸ்டல் வாசலில் நிற்பதைப் பார்த்து தேவி ஒரு தலையாய் காதலித்தது நிறைய பேருக்கு தெரியும்... சஞ்சனா உட்பட!

அதிகம் வெளியில் சுற்றவில்லை என்றாலும், வாரத்திற்கு ஒரு முறை ஓரிரு மணிநேரம் சந்தித்து காதல் வளர்த்தனர்.

வேறு ஜாதி, குடும்ப அமைப்பு, கட்டுப்பாடு, கண்டிப்பாய் காதலை ஏற்காது என்பது தெரியும். ஆனாலும், இது எதற்காகவும் தங்கள் காதலை விட்டுத் தரப் போவதில்லை என்பதிலும் உறுதியாக இருந்தனர்.

படிப்பு முடியும் தருவாய்! இன்னும் இரண்டே வாரத்தில் பரீட்சை முடிந்து ஊர் போயாக வேண்டும். இருவரும் பேசி ஒரு முடிவுக்கு வந்தனர். யாருக்கும் தெரியாமல் ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக் கொள்வது. அவரவர் ஊருக்கு சென்று விடுவது. திலக்கிற்கு நல்ல வேலை கிடைத்ததும் முறையாகப் பெண் கேட்டு ஊரறிய திருமணம் செய்துக் கொள்வது. சம்மதிக்காத பட்சம் தங்கள் திருமணத்தை வெளிப்படையாக அறிவித்து விட்டு வெளியேறி தனியே வாழ்க்கையை தொடங்குவது என்று!

அதன்படியே திருமணமும் நடந்தது. அது சஞ்சனாவின் தோழிகள் யாருக்கும் தெரியாது. சாட்சி கையெழுத்து கூட திலக்கின் அறைத் தோழர்கள் போட்டதுதான்!

திட்டப்படி எல்லாம் நடந்தது.

பரீட்சை முடிந்து விடுமுறை விடப்பட்டன. மூட்டை முடிச்சுகளின் நடுவில் கட்டிய தாலியையும் மறைத்து எடுத்துக் கொண்டு ஊர் வந்து சேர்ந்தாள் சஞ்சனா.

திலக் தந்த செல்போன் நம்பருக்கு போன் செய்தாள்.

'இந்த எண் தற்போது உபயோகத்தில் இல்லை' என்று வந்த போது...

பயம் கவ்விக் கொண்டது முதன் முறையாக!

காலிங் பெல் அலறியது.

"கூரியர்" என்ற குரலும் அழைக்க... சஞ்சனா பழைய நினைவுகளிலிருந்து விடுபட்டு எழுந்தாள்.

15

"இன்னும் பத்து நாள்ல தீபாவளி... ஒரு வாரம் முன்னாடியே வந்துடு திலக்" என்றாள் ராஜலட்சுமி போனில்.

"என்னம்மா புரியாம பேசறே? இப்பதான் தொழில் நல்லா டெவலப் ஆகிட்டிருக்கு. நான் எப்படி விட்டுட்டு வரமுடியும்?"

"டேய்... அதுக்காக நாள் கிழமைன்னா குடும்பத்தோட வந்து கொண்டாடக் கூடாதா?"

"கோபப்படாதேம்மா! முடிஞ்சா வர்றேன். வர முடியாதபடி சூழ்நிலை அமைஞ்சா... தப்பா எடுத்துக்காதே!"

"எந்த விதத்திலேயாவது என்னை சந்தோஷப்படுத்தி இருக்கியா திலக்? கல்யாண விஷயமாகட்டும்... சொந்தமா கெமிக்கல் பேக்டரி வைக்கணும்னு நிலத்தை வித்து அதிலே போட்டே! போதாதுக்கு ஊரை விட்டு அங்கே போய் உக்காந்துட்டே! பண்டிகைக்கு வான்னு கூப்பிட்டா... இல்லாத காரணம் எல்லாம் சொல்லி வரமாட்டேன்னு மனசை நோகடிக்கிறே! வயசான காலத்துல இன்னும் என்ன கஷ்டமெல்லாம் தரலாம்னு பட்டியல் போட்டு வச்சிருக்கே!"

"அம்மா.. அம்மா... என் சூழ்நிலையை என்னன்னு சொல்லி புரிய வைக்கிறது? நான் என்ன சொன்னாலும் நீ ஏத்துக்கப் போறதில்லே! கொஞ்சம் பொறுத்துக்க. உனக்கேத்த மாதிரி என்னை மாத்திக்க முயற்சிக்கறேன்."

"நீ இப்படின்னா... உடும்புப்பிடியா ஒரே பிடிவாதம் அந்த மதுவுக்கு... எந்த மாப்பிள்ளையும் வேணாங்கிறா. அவளை பெத்தவங்க அழுதுட்டுப் போறாங்க. இந்த காலத்துப் பிள்ளைங்க.. படிச்சிட்டா போதும்... தன்னால எல்லாத்தையும் வளைச்சிட முடியும்னு நினைக்குதுங்க. ரெண்டுபேருக்கும் எப்ப புத்தி வரப்போவுதோ... புரியலே. நான் வச்சிடறேன் திலக்!"

அம்மா போனை வைத்த பின்பும் நெடுநேரம் மதுவைப் பற்றியே யோசித்தான்.

'அவளிடம் கடைசியாய் ஒரு முறை பேசிப் பார்த்தால் என்ன? பைத்தியக்காரத்தனமாய் என்னையே நினைத்துக் கொண்டு ஏன் இருக்க வேண்டும். என்னால் தான் அவள் வாழ்க்கை



கெடுவதாய் உறவுகள் நினைக்குமளவுக்கு ஏன் நடந்துக் கொள்ள வேண்டும்?'

'எடுத்துச் சொன்னால் கேட்பாளா?'

அன்றுக் கூட காரில் டிராப் பண்ண போகும் போது, 'உன் கடந்த காலத்தைப் பத்தி எனக்கு அக்கறையில்லை திலக். அதைப் பத்தி என்னைக்குமே கேட்க மாட்டேன். கிடைக்காத ஒரு பொருளைப் பத்தி நினைச்சு, ஏங்கி, வாழ்க்கைய வீணாக்கிக்கறதை விட, உனக்காகவே காத்துக்கிட்டிருக்கிற என்னைப் பத்தி ஒரே ஒரு நிமிஷம் நினைச்சுப் பார். உன்னை நீயே காதலிப்பே...!' என்று தத்துபித்தென்று உளறுபவளிடம் சொன்னால் எடுபடுமா என்ன? ம்ஹூம்... சான்ஸே இல்லை...'

பெருமூச்சு விட்டான்.

வீட்டில் யாருமில்லை!

உதய் அலுவலகம் சென்று விட்டான். பிரவீணா ஸ்கூலுக்கு! அத்தையும் மாமாவும் மூன்று நாள் சுற்றுலாவாக தெருவாசிகளோடு நவக்கிரக ஸ்தலங்களுக்கு சென்றிருந்தனர்.

சஞ்சனாவுக்கு ஒரு யோசனை தோன்றியது.

'இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால்... திலக்கிற்கு நடந்த உண்மைகள் தெரிய வேண்டும். அதற்கு அவனை சந்தித்து பேசியாக வேண்டும். ஆபீஸிலோ, வெளியிலோ சந்தித்து பேசுவது உசிதமல்ல. வீட்டில் யாருமில்லை. திலக்கை வீட்டிற்கு வரவழைத்தால் என்ன?'

நெடுநேரம் ஆலோசித்து அவனுக்கு போன் பண்ணினாள்.

எடுத்தவன் யாரென்று தெரியாமல் "ஹலோ!" என்றான்.

"நா... நான் ச... சஞ்சனா பேசுறேன்"

"நீயா? என்ன விஷயம்?"

"நான் உங்ககிட்டே பேசணும்."

"எனக்கு விருப்பமில்லை!"

"பாருங்க திலக்... சந்தர்ப்பமும், சூழ்நிலையும் என்னை உங்களிடம் தப்பா நினைக்க வச்சிடுச்சு. நான் தூங்கியே மாசக் கணக்குல ஆச்சு. இதே ரீதியிலே போனா என் உயிர்கூட போயிடும் போலிருக்கு."

"அதனால எனக்கு எந்த நஷ்டமும் இல்லை!"

"அவ்வளவு மோசமான பெண்ணாகவா நினைச்சிருக்கீங்க? சரி... பரவாயில்லே... நீங்க இப்பவே கிளம்பி எங்க வீட்டுக்கு வரணும். வீட்ல யாருமில்லே. நான் பேசணும்...."

"என்ன மிரட்டறியா?"

"ஆமா... அப்படியே வச்சுக்குங்க. இப்ப நீங்க வரலேன்னா... நான் நம்மளைப் பத்தி லெட்டர் எழுதி வச்சுட்டு சூசைட் பண்ணிப்பேன்!" குரலில் அழுகையும், உறுதியும் தெரிந்தது.

"ஏய்... இந்த மிரட்டலுக்கெல்லாம்..."

"நீங்க பயப்படலேன்னாலும் சரி... இப்ப வர்றீங்க... இல்லேன்னா சொன்னதை செய்வேன்!" போனை வைத்து விட்டாள்.

திலக்கிற்கு டென்ஷனாயிருந்தது. அவள் பேச்சில் இருந்த தீவிரம் புரிந்தது.

கிளம்பினான்.

ஹாலில் சோபாவிலேயே அமர்ந்திருந்த சஞ்சனா... திலக் வந்தபோது 'வாங்க' என்று கூட சொல்ல மனமின்றி எழுந்து நின்றாள்.

"என்ன நினைச்சிட்டிருக்கே நீ? மிரட்டறியா... நடிக்கறியா?"

"தேவையில்லாததை பேசி நேரத்தை வீணாக்காதீங்க... நான் உங்களை ஏமாத்தினதா நினைச்சு என்னை கேவலமா பேசறீங்க. ஆனா, ஏமாத்தினது நீங்கதான்!"

"அட... இதென்ன புதுக்கதை? நான் உன்னை ஏமாத்தி, வேறொரு பொண்ணை கல்யாணம் பண்ணி, குழந்தை, குடும்பம்னு வாழ்ந்துட்டிருக்கேனா?"

"குத்திகாட்றதா நினைச்சு.. உங்க தப்பை மறைக்கப் பார்க்காதீங்க..."

அவள் சொல்லிக் கொண்டிருக்கும் போது... சஞ்சனாவின் செல்போன் ஒலித்தது.

உதய் தான்!

"ஹலோ என்னங்க?"

"......?!"

"சாப்பிட்டேங்க...ம்... மாத்திரையெல்லாம் சாப்பிட்டாச்சு."

"........?!"

"வர லேட்டாகுமா?"

".......?!"

"சரிங்க வச்சிடறேங்க!" என்று போனை வைத்தாள்.

"பாவம் உதய்... அவனுக்கும் நீ எப்பேர்ப்பட்ட துரோகம் பண்ணியிருக்கே.. ச்சீச்சீ... நீயெல்லாம் ஒரு பொம்பளையா?"

"காதலிச்சவளை... நம்பி கழுத்தை நீட்டியவளை விட்டுட்டுப் போன துரோகி நீங்கதான்."

"நானா?"

"ஆமாம்! எக்ஸாம் முடிஞ்சு ஊருக்குப் போனதோட சரி. உங்க செல்போனை கட் பண்ணிட்டீங்க. நான் ஆயிரம் முறை

உங்களுக்கு போன் பண்ணினேன். காண்டாக்ட் பண்ணவே முடியலே. வீட்ல அம்மா கல்யாணத்துக்கு மாப்பிள்ளை பார்த்து வச்சிருந்தாங்க. அப்ப என் சூழ்நிலையை என்னன்னு சொல்லுவேன்? ஃப்ரண்டுக்கு கல்யாணம்னு பொய் சொல்லி தாராபுரம் வந்து பார்த்தா... வீட்டையும் காலி பண்ணிட்டு குடும்பத்தோட எங்கேயோ போய்ட்டதா சொன்னாங்க. வீடே கதின்னு வாழற கட்டுப்பாடான குடும்பத்திலேர்ந்து வந்தவ நான். இதுக்கு மேல உங்களை எங்கேன்னு தேடுவேன்? உங்க நண்பர்கள் யாரையும் எனக்கு பழக்கமில்லே. யார்கிட்டே கேட்பேன்? என் அட்ரஸ் உங்ககிட்டே இருந்துச்சே! உங்ககிட்டேர்ந்து தகவல் வரும்னு... ஒவ்வொரு நாளும் காத்திருந்தேன்."

"..........?!"

"அண்ணனோட வருமானத்துல வாழ்ற தகப்பன் இல்லா குடும்பம் என்னுது! நான் ஏதேதோ சாக்குபோக்கு சொல்லி கல்யாணத்தை தட்டிக் கழிச்சிட்டு வந்தப்பதான்... அம்மா சந்தேகப்பட்டு என்னை தனியா கூட்டிட்டுப் போய் விசாரிச்சாங்க. வேற வழியில்லாம நான் உண்மைய சொல்லி பெட்டியில மறைச்சு வச்சிருந்த தாலியையும் காண்பிச்சேன். அப்ப வந்த ஹார்ட் அட்டாக்லதான் எங்கம்மா... ரெண்டே நாள்ல என்னை விட்டுட்டுப் போய்ட்டாங்க."

"மை... காட்!"

"சாகறப்ப... உன்னை அவன் ஏமாத்திட்டான். இதை எங்கிட்ட சொன்ன மாதிரி எல்லார்கிட்டேயும் சொல்லிட்டிருக்காதே! நல்லவேளை அவசரப்பட்டு நீ உன் உடம்பை அவனுக்குத் தரலே... இதை கெட்ட கனவா நினைச்சு மறந்துட்டு... நான் பார்த்த பையனை கல்யாணம் பண்ணிக்கணும்னு சொல்லிட்டு கண்ணை மூடிட்டாங்க."

"..........?!"

"என்னோட சூழ்நிலைகள், சங்கடங்களை வார்த்தையால சொல்ல முடியாது. அம்மா இறந்ததும் மூணு மாசத்துக்குள்ளே நல்ல காரியம் பண்ணிடணும்னு உறவுக்காரங்க சொன்னதால கல்யாண ஏற்பாடுகள் நடந்தது. அப்பவும் உங்களை தேடறதை நிறுத்தலே. ஆனா... நீங்க கிடைக்கவே இல்லை."

"..........?!"

# 16

"நீங்க என்னை ஏமாத்திட்டதாகவே நானும் நம்ப வேண்டியதாப் போச்சு. இல்லேன்னா என்னைத் தேடி நீங்க வந்திருப்பீங்களே! நெஞ்சு முழுக்க ஒரு குற்ற உணர்வோட, பயத்தோட இன்னொருத்தருக்கு கழுத்தை நீட்டினேன். நீங்க எனக்குக் கட்டின தாலியை மதிக்கலேன்னாலும், நான் ஏற்கனவே கல்யாணமானவள்ங்கிற உண்மையை என் புருஷன்கிட்டே மறைச்சதை தவிர.. நான் அவருக்கு எந்த துரோகமும் பண்ணலே! அவரோட உண்மையான அன்புக்கு அடிமையா இருந்து சாகணும்னுதான் ஆசைப்படறேன். உங்களை மறுபடி பார்த்ததால அதிர்ச்சிதான் உண்டானதே தவிர, துளி சலனமும் எட்டிப் பார்க்கலே. ஏன்னா, என் மனசு முழுக்க என் புருஷன் உதய் மட்டும்தான் இருக்கார். ஆனா, என்னை தப்பா புரிஞ்சுக்கிட்டு, என் உதய்கிட்டே நீங்க போட்டுக் கொடுத்துடுவீங்களோன்னு பயமயிருக்கு. தயவு



செஞ்சு அப்படி பண்ணிடாதீங்க திலக்!" குமுறிக் கொண்டு வந்தது அழுகை.

விக்கித்துப் போய் நின்றிருந்தான் திலக்.

"ஸாரி சஞ்சனா...."

"..........?!"

"உண்மையிலேயே தப்பு என் பக்கம் தான்னு இப்ப புரியுது!"

"........?!"

"நான் எக்ஸாம் முடிஞ்சு ஊருக்கு புறப்பட்டபோது என் பெட்டிய தொலைச்சிட்டேன். அதிலே என்னோட செல்போன், அட்ரஸ்கள் அடங்கிய டைரி, முக்கியமான ஏகப்பட்ட விஷயங்கள் போயே போச்சு. ஊருக்குப் போனதும் ஒரு டிரெய்ன் ஆக்ஸிடன்ட்ல அப்பா இறந்துட்டார். சித்தப்பா, ஏற்கனவே அப்பாகிட்டே சில வெற்றுப் பேப்பர்ல கையெழுத்து வாங்கி, எங்க வீடு, சில சொத்துக்களை ஏமாத்தி எடுத்துக்கிட்டார்.

மனசொடிஞ்சு போன அம்மாவுக்காகவும், அந்த சமயத்திலே அண்ணனுக்கு பெங்களூருக்கு டிரான்ஸ்பர் கிடைச்சதாலும், நாங்க அங்கே போய் செட்டிலாகிட்டோம். உன் அட்ரஸ் அந்த டைரியோட போய்டுச்சு. ஆனாலும், நான் நாலஞ்சு முறை மாயவரம் வந்து தேடினேன். வெளிப்படையா உன் பேரை சொல்லி விசாரிக்க முடியாம திருச்சி காலேஜில படிச்சப் பொண்ணுன்னு அடையாளம் சொல்லி தேடினேன். யாருக்கும் தெரியலே. நம்ம ஃப்ரண்ட்ஸ்கிட்டேயும் விசாரிச்சேன். அவங்களுக்கும் தெரியலே. வீட்ல கல்யாணம் பண்ணிக்க சொல்லி டார்ச்சர் பண்ணினதால... கெமிக்கல் பேக்டரி வச்சு பிசினஸ் பண்ணப்போறேன்னு அதையே சாக்கா வச்சு இங்கே வந்துட்டேன். நீ என்னைக்காவது என் கண்ணில்படுவேங்கிற நம்பிக்கையிலதான் இப்பவரைக்கும் கல்யாணம் பண்ணிக்காம இருந்தேன் சஞ்சனா. ஆனா, என் உயிர்த்தோழனோட மனைவியா உன்னை சந்திப்பேன்னு நான் எதிர்பார்க்கலே...!" என்று சொல்லி முடித்தவன், பெருமூச்சுடன் தன் இரு கரங்களாலும் தன் முகத்தை அழுந்த தேய்த்துக் கொண்டான் நாசூக்காய்... துளிர்த்த கண்ணீரையும் சேர்த்து...!

அதன்பின் இருவரிடையே கனத்த மௌனம் சூழ்ந்தது.

அடங்காமல் கொப்புளித்த கண்ணீரை துடைத்துக் கொண்டே இருந்த சஞ்சனா, "ஒரு நிமிஷம் இதோ வந்துட்டேன்" என்று உள்ளே சென்றவள், ஐந்து நிமிடத்தில் வெளியில் வந்தாள். கையில் ஒரு கவர் இருந்தது.

"இந்தாங்க..."

"எ... என்னது?"

"பிரிச்சுப் பாருங்க!"

எடுத்துப் பார்த்தான். ஒரு பட்டுப் புடவையும், கால் பவுனில் தாலியும்.

திலக்கின் விழிகள் விரிந்தன.

"கல்யாணத்தப்ப நீங்க வாங்கிக் கொடுத்த புடவையும், கட்டின தாலியும்! பத்திரமா வச்சிருந்ததுக்குக் காரணமே, அர்த்தமே இல்லாமப் போன இந்த சம்பிரதாயப் பொருட்களை உங்ககிட்டே சேர்க்கணும்னுதான்!"

"ச..ஞ்..ச..னா!"

"நீங்களோ, நானோ எந்தத் தப்பும் பண்ணலே. சூழ்நிலைதான் நம்மைப் பிரிச்சது. நீங்க இனிமேலும் உங்க வாழ்க்கையை வீணடிச்சுக்காம கல்யாணம் பண்ணிக்கணும். இந்தாங்க... இது உங்ககிட்டே இருப்பதுதான் நல்லது!"

வாங்கிக் கொண்டான். தொண்டைக்குள் வேதனை குமிழ்ப்பந்தாய் இறங்கி இம்சித்தது.

இதுநாள் வரை தன் உடைமையாய், உரிமையாய் நினைத்த உயிர் அவனுக்கு சொந்தமில்லை.

அப்படியானால்... இத்தனை வருடமும் வாழ்ந்த வாழ்க்கைக்கு அர்த்தம் என்ன? தவமாய் காத்திருந்தவனுக்கு கிட்டிய வரம் என்ன? வெட்டுப்பட்ட உறவா?

"வர்றேன்!" திரும்பிப் பார்க்காமல் நடந்தான்.

"ஒரு நிமிஷம்!"

"........?!"

"உங்களை நான் பார்க்கறபோதெல்லாம், என் வயித்துல இருக்கிற குழந்தை பாதிக்கிற அளவுக்கு பயத்துல துடிச்சுப் போய்டறேன். தயவு செய்து... அவர் கூப்பிட்டாக்கூட இனி இங்கே...?!"

திலக் அவளை நிமிர்ந்து பார்த்து ஒரு புன்னகையை உதிர்த்து விட்டு சென்றான்.

அந்த புன்னகைக்கு என்ன அர்த்தம் என்று தெரியவில்லை அவளுக்கு.

கார் புறப்பட்டது.

மனசு நிர்மலமானது.

ஆச்சர்யமாய் இருந்தது சஞ்சனாவுக்கு! இதுநாள் வரை அலுவலக வேலை என்றுக் கூட வெளியூர் செல்லாத உதய், இப்போது 'நண்பனின் தங்கை திருமணம், கும்பகோணம் போகணும், வர மூணு நாள் ஆகும்' என்று சொல்கிறான். அதுவும் ஒரு வார்த்தைக்குக் கூட 'நீயும் வா சஞ்சு' என அழைக்கவே இல்லை.

முகத்தில் என்னவோ பதற்றம். கேட்கவோ தயக்கம். அது ஏனென்று அவளுக்கேப் புரியவில்லை. அமைதியாக இருந்து விட்டாள்.

உதய் கிளம்பி விட்டான்.

ஆனால், அவன் சென்னையிலேயே ஒரு லாட்ஜில் அறை எடுத்து, மூன்று நாளும் தனிமையில் கதறி அழுததை யார் அறிவார்?

"என்னடாச் சொல்றே?" மிகமிக அதிர்ச்சியாய் கேட்டான் உதய்.

"ஆமாம் உதய்... இனி இந்த பேக்டரி முழுக்க நீதான் பார்த்துக்கப் போறே... இதெல்லாமே உனக்குதான் சொந்தம்!" சின்ன சிரிப்புடன் அவன் கைப்பற்றி சொன்னான் திலக்.



"உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? நல்லா லாபகரமா போய்க்கிட்டிருக்கற கம்பெனிய விட்டுட்டு நீ எங்கே போறே?"

"இல்லேடா...நஷ்டத்துல ஓடற கம்பெனிய உன் தலையில கட்டிட்டு ஓடினாதான் தப்பு. இது அப்படியில்லே...! தவிர, நான் போட்ட முதலீடை நீ உடனே தரணும்னு அவசியமில்லை. மாசா மாசம் கொஞ்ச கொஞ்சமா குடு! ஏன்னா, பேங்க்ல லோன் வாங்கியிருக்கேன்!"

"தெரியும்டா... அதான் ஏன் இந்த முடிவுங்கறேன். நீ ஆசைப்பட்டு உருவாக்கினது இது!"

"பரவாயில்லேடா... எனக்கும் கல்யாணம் பண்ணிக்கிட்டு குடும்பஸ்தனா வாழணும்னு ஆசை வந்துடுச்சு. எங்கம்மாவை ரொம்ப நோகடிச்சிட்டேன். அவங்களை இனியாவது சந்தோஷமா வச்சுக்கணும். எனக்காக வருஷக்கணக்கா டெல்லியிலே ஒருத்தி காத்திருக்கா! அவளை கல்யாணம் பண்ணிக்கிட்டு அங்கேயே வேலை பார்த்து செட்டில் ஆகிடணும்னு தோணுச்சு... தட்ஸால்!"

"அதுக்காக?"

"என்னடா திரும்ப திரும்ப? ப்ச்... நான் முடிவெடுத்தாச்சு... ஓக்கே... ஆல் த பெஸ்ட்!" வலுக்கட்டாயமாய் அவன் கையைப் பற்றிக் குலுக்கினான் திலக்.

'சில கசப்பான அனுபவங்களை மறக்கத்தான் முயற்சிக்க வேண்டுமே ஒழிய, பிராயச்சித்தம் தேடக் கூடாது. ஆனா, சஞ்சனாவுக்காக என் லட்சியங்களை நொறுக்கி விட்டு போக வேண்டிய கட்டாயம் உதய்! அது உனக்கும் நல்லதும் கூட'

நினைத்து பெருமூச்சு விட்டான் திலக்.

சஞ்சனா பால் தம்ளரை நீட்ட... அதை வாங்கிப் பருகிய உதய், "இதையெல்லாம் நான் பார்த்துக்க மாட்டேனா? நீ நேரத்துக்குப் படு சஞ்சு" என்றான்.

"அதெல்லாம் இருக்கட்டும்... நான் ஒண்ணு கேக்கலாமா?"

"கேளு..."

"ஒரு வாரமா உங்க முகமே சரியில்லே... சதா எதையோ யோசிச்சுக்கிட்டு... என்கிட்ட கூட சரியாப் பேசலே... அப்படியென்ன பிரச்சினை... என்கிட்ட கூட சொல்ல முடியாமா?"

"ஐயோ.. என்கிட்ட எந்த ரகசியமும் இல்லேம்மா!"

அவன் சொன்ன விதம் சஞ்சனாவை சஞ்சலப் படுத்தியது.

## 17

"எ..என்ன?"

"ஒண்ணுமில்லே சஞ்சனா... திலக் திடுதிப்புன்னு பேக்டரி முழு பொறுப்பையும் என்கிட்டே கொடுத்து, 'நீயே வச்சுக்க'ன்னு சொல்வான்னு நினைக்கலே!"

"எனக்கு ஆரம்பத்திலேர்ந்தே அவரோட பார்ட்னர்ஷிப்ல பிஸினஸ் பண்றது பிடிக்கலே. அதான் கடவுளாப் பார்த்து உங்ககிட்டேயே கொடுத்துட்டான்."

"அவனுக்கு சொந்தமானதாச்சே..."

"நீங்களும் ஷேர் போட்டிருக்கீங்க!"

"ஆயிரம் சொல்லு... இதிலே அவனோட உழைப்பு அதிகம்."

"........?!"

"அவன் திடீர்னு ஏன் அப்படி ஒரு முடிவெடுத்தான்னு புரியலே. லட்சக்கணக்குல லாபம் வர்ற பிஸினஸை விட்டுட்டு, அறுபதாயிரம் சம்பளத்துல வேலை கிடைச்சிருக்குன்னு ஓடறான்."

"படுத்துக்கட்டுமா? டயர்டாயிருக்கு!"

"ம்...!"

கட்டிலில் படுத்துக் கொண்டவளின் தலையைக் கோதி கொடுக்க... மெல்ல இமைகளை மூடினாள்.

அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன்... மெல்ல புன்னகைத்தான்.

அதில் ஏகப்பட்ட ரகசியம் புதைந்து கிடந்தது.

அன்று சஞ்சனா திலக்கை வீட்டில் வரவழைத்து தங்கள் கடந்த கால வாழ்க்கையை பற்றி பேசிக் கொண்டிருந்த போது, உதய் இடையில் மனைவிக்கு போன் பண்ணினான். பேசி முடித்தவள், ஆப் பண்ணுவதாக நினைத்து, பதற்றத்தில் பட்டனை சரியாக அழுத்தாததால்... அங்கு நடந்த உரையாடல் அத்தனையும், உண்மைகள் அத்தனையும் அவன் காதில் விழுந்தன. துடித்துப் போனான்.

யாரால் தான் தாங்கிக் கொள்ள முடியும்?

எந்தப் பொருளை வேண்டுமானாலும் செகண்ட் ஹேண்ட்டில் வாங்கலாம். பைக், கார், டிவி, ஃப்ரிட்ஜ் எல்லாமே! ஆனால், ஏற்கனவே ஒருவனை மணந்து, அதை மறைத்து, எதுவும் அறியாத இன்னொருவனை மணந்து,

வாழ்ந்து, குழந்தை பெற்று... எப்பேர்ப்பட்ட தவறு?

இதையெல்லாம் தாங்கிக் கொள்ள முடியாமல் தான் லாட்ஜ் அறையில் முட்டி மோதி அழுதான்.

ஆனால், அழ அழ, மேம்போக்கான கோபங்களும் சுயவிரக்கமும் கரைந்தோடி, தெளிவாய் சிந்தித்தான்.

சஞ்சனா பக்கத்து காரண காரியங்களை யோசித்தான்.

திருமணமான புதிதில் அவள் அவனை நெருங்கவே இல்லை. அவளின் தயக்கமும், பயமும் போகட்டும் என்று காத்திருந்தான்... கிட்டத்தட்ட ஒரு மாதமாய்! அதுவரை ஒரு நண்பனாய் பழகி, சாப்பிட்டு, சுவைத்து, பாராட்டி, அவளை இயல்பாய் நெருங்க வைத்தான்.

தீர யோசித்தால் அவள் மீதோ, திலக் மீதோ என்ன தவறைக் காண முடியும்? காதல், தோல்வியில் முடிந்துவிடக் கூடாது என்பதற்காக, பக்குவமில்லாத வயதில், திருட்டுத்தனமான திருமணம் என்ற முடிவுக்கு வந்திருக்கின்றனர். ஆனால் அதற்கு மேல் வெற்றிகரமாய் அந்த உறவை அடுத்தப்படியில் எடுத்துச் செல்ல முடியவில்லை.

ஒரு மனைவியாய் சஞ்சனா அவனுக்கு எந்த குறையும் வைத்ததில்லை. திலக்கை மீண்டும் சந்தித்த அதிர்ச்சியில்தானே குழந்தை கருவிலேயே மடிய இருந்தது?

அவன் பேசியதிலிருந்தே சஞ்சனா தன் மீது எந்த அளவுக்கு நேசம் வைத்திருந்தாள் என்பது அவன் அறிந்த ஒன்று! அவள் கடந்த கால வாழ்க்கை தனக்கு தெரிந்து விட்டது என்று தெரிந்தாலே போதும்... சஞ்சனா பரலோகம் செல்ல!

பாரிஜாத மலராய் இருப்பதை விட, பருத்தி மலராய் இருப்பது மானத்தைப் போக்கும். பெண்கள் பருத்தி மலராய் இருப்பதே போதும்! சஞ்சனா... நல்லப் பெண்தான்! பிறகெதற்கு அவளை தண்டிக்க வேண்டும்?

அதன் பிறகுதான் உதய் இயல்பு நிலைக்கு வந்து வீடு திரும்பினான்.

திலக் அவளை விட்டு பிஸினஸிலிருந்து விலகியதுக் கூட ஒரு வகையில் சரிதான் என்று தோன்றியது.

பக்கா ஜென்டில்மேன்! அவர்களுடைய நிம்மதியான வாழ்க்கைக்காக, அவன் லட்சியம், உழைப்பு எல்லாவற்றையும் விட்டு போய் விட்டான். நட்புக்கு இலக்கணம் அவன்.

'இனியாவது நிம்மதியாய் தூங்கு சஞ்சு!' குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டான்



உதய்.

மெல்ல கண்விழித்தவள், "என்னடா செல்லம்?" என்றாள் கொஞ்சலாய்.

"ஐ லவ் யூ!" என்றான்.

சஞ்சனா தன் வலக்கையால் அவன் முதுகை வளைத்து தன் மீது போர்த்திக் கொண்டாள்... நிர்மலமற்ற காதலால்!

எல்லாவற்றையும் 'பேக்' செய்தான் திலக்!

விடிந்தால் தீபாவளி!

இன்றிரவு மதுரிமா முன் சென்று நின்றால்... அவள் முகத்தில் தெரியும் வியப்பும், பரவசமும்... "ஹேய் திலக்... வாட் எ சர்ப்ரைஸ்?" என்று கேட்பதை, விழிப்பதை காண வேண்டும் போல் இருந்தது.

அவளை அப்படியே பெங்களூருக்கு அழைத்துச் சென்று... வீட்டினர் முன் நின்று... அதன் பின்...

திலக் நிறைய திட்டம் வைத்திருந்தான்.

மதுவுக்கு பிடித்த மைசூர்பாகை வாங்கி தயாராய் வைத்திருந்தான்.

சஞ்சனா கொடுத்த தாலி அடங்கிய கவரை சிக்னலில் பிச்சை எடுத்த பெண்ணிடம் கொடுத்து விட்டதில் உள்ளம் நிம்மதியாய் இருந்தது.

அறையை பூட்டி வெளியே செல்ல முயன்றவனை ஸ்தம்பிக்க வைத்தது...

"ஹேய்... என்ன இது திலக்? நான் வரப் போறேன்னு தெரிஞ்சு ஊரைவிட்டே ஓடப் பார்க்கறியா?" என்றபடி அவன் முன் வந்து



## கர்ப்பப்பை பாதிப்பை ஏற்படுத்தும் கலப்பட குங்குமம்

இன்றைய நாகரீக உலகில் ஆரோக்கியமாக வாழ்வதே அதிசயம் தான். ஒழுங்கில்லாத செயல்கள் மனித வாழ்வை விழுங்கத் தொடங்கி விட்டன. பருகும் நீர், உண்ணும் உணவு, உயிர்க் காற்று என எல்லாம் மாசு படுத்தப்பட்டு விட்டன.

மங்கலப் பொருளான நெற்றிக் குங்குமத்தையும் இந்த கலப்படம் பற்றிக் கொண்டு விட்டது. இந்த மாங்கலக் குங்குமம் தாங்கிடும் நெற்றிகள் இன்று கருப்பாய் மாறிக் காட்சியளிக்கின்றன. காரணம் செவ்வீயம் குங்குமத்தில் கலக்கப்படுவதுதான். அது கருப்பையையும் பாதிக்கும் தன்மை கொண்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

எது நல்ல குங்குமம், எது கலப்பட குங்குமம் என்று நம்மால் தரம் பிரித்து வாங்குவது கடினம். இதை தவிர்க்க வீட்டிலேயே நாம் குங்குமம் தயாரித்துக் கொள்ளலாம்.

- ஆர்.ஆர்.பூபதி, திண்டுக்கல்.

நின்றாள் மதுரிமா.

"ஏய்.. நீ எப்படி?"

"என்ன புதுசா கேக்கறே? நீ என்னதான் திட்டினாலும் சூடு சொரணையே வரமாட்டேங்குது. ஒரு நல்ல நாள்னாலும், மனசு சரியில்லேன்னாலும் உன் முகத்தைப் பார்த்தாதான் நிம்மதி! நாளைக்கு தீபாவளியாச்சே... அதான் விஷ் பண்ணிட்டு அடுத்த பிளைட்டை பிடிச்சி ஓடலாம்னு வந்திருக்கேன்!"

"விஷ் பண்ண பிளைட்லேயா?"

"சப்போஸ் என் நம்பர் பார்த்தா போனை அட்டெண்ட் பண்ண மாட்டியே...!"

"இனி அப்படி பண்ண மாட்டேன்!" என்றான் அவளை நேர்பார்வை பார்த்து.

"ஏன் அப்படி?" புரியாமல் பார்த்தாள்.

கதவை திறந்து உள்ளே வந்தனர்.

"என் மனசு இப்ப நிர்மலமாயிருக்கு மது!"

"அதனால?"

"இந்த தீபாவளிய உன் கூட கொண்டாடணும்னுதான் நானும் கிளம்பினேன்!"

"இஸிட்?" என்றாள் நம்பாமல்!

"நம்பலே இல்லே?"

"ம்..."

"நான் உன்னை லவ் பண்ணப் போகிறேன் மது!"

"ஹேய்... நிஜமாகவா சொல்றே?"

"ஆமாம்! நேத்து வரைக்கும் என் மனசுல..."

"வேணாம்... வேணாம் திலக்! எதுவும் எனக்குத் தெரிய வேணாம். தெரிஞ்சுக்கவும் நான் விரும்பலே. யாரோ ஒரு பொண்ணுக்காக வேறெந்த பொண்ணையும் ஏறிட்டுப் பார்க்காத உன் மனசு எனக்கு சொந்தமாகணும்னு பேராசைப்பட்டேன்! அது நிறைவேறிடுச்சு... தாங்க்ஸ்... தாங்க்ஸ் திலக்!"

அவன் வார்த்தைகளற்று மதுவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஒரே ஒரு ரிக்வெஸ்ட் திலக்!"

"என்ன?"

"எனக்கு அழணும் போலிருக்கு!"

"..........?!"

"உன் தோள்ல சாஞ்சுக்கட்டுமா?"

"ம்...!"

அடுத்த நொடியே அவன் மார்பில் மெத்தென்று முகம் புதைத்து அழுதாள் மது.

சில கணங்கள் கடந்தது.

"நீயெல்லாம் வேஸ்ட் திலக்... உனக்கு ஒண்ணுமே தெரியலே!"

"எதைப் பத்தி?"

"நீ சினிமாவுல கூட பார்த்ததில்லையா?"

"புரியலே!"

"எவ்ளோ அழகானப் பொண்ணு நான்? சாஞ்சு அழறேனே... ரெண்டு கையையும் விறைப்பா வச்சுக்கிட்டு பொம்மை மாதிரி நிக்கறியே! இந்நேரம் கட்டிப்பிடிச்சு கிஸ் பண்ண வேண்டாமா?"

"ஏய்...ச்சீச்சீ... நான் இனி தான் உன்னை லவ் பண்ணவே ஆரம்பிக்கணும்... அதுக்குள்ளே...?!"

"ஆனா... நான் ஆறேழு வருஷமா லவ் பண்ணிட்டிருக்கேனே..." என்றவள் அவன் உதடை கவ்வ முயல... சிரித்தபடி விலக்கினான்.

"இப்ப வேணாம் மது! நான் உன்னை முழுசா என் மனசுக்குள்ளே உக்கார வைக்கணும். அதுக்காகவே டெல்லியிலே வேலைக்கு ஏற்பாடு பண்ணிட்டேன்! வேலை செஞ்ச நேரம் போக நாம லவ் பண்ணலாம்...ஒக்கே?"

"யோவ்... உண்மையாகவா சொல்றே? டெல்லிக்கே வரப்போறியா? ஹ அர்ரே.." என்று குதித்தவள் சட்டென திலக் கன்னத்தில் முத்தமிட்டாள்.

"நீ.. திருந்தவே மாட்டே...!" புதுப்பெண் போல் வெட்கப்பட்டான் திலக்.

வெளியில் படபடவென பட்டாசு வெடிக்கும் சப்தம் காதை கிழித்தது.

உள்ளேயும் காதல் தீபாவளி ஆரம்பமாகி விட்டிருந்தது!

(முற்றும்)